# தீபகச் சுடர்

TO SHARE THE LIGHT

ஏப்ரல் 2025

தீபம் 13 சுடர் 11

திபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



# தீபகத்திலிருந்து இறையாசீர்



**அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,**

## உயிர்ப்பின் கிறிஸ்தவர்கள்

இறையேசுவில் பிரியமானவர்களே, 'கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால், நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" (1கொரி. 15:14). உயிர்த்த கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கை தமது மூலைக்கல்லானது. இது ஒரு நிகழ்வு மட்டுமல்ல. மாறாக, இது நம் வாழ்க்கையை மாற்றியமைக்கும் நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை கிறிஸ்தவர்களின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி பெறும் அழைப்பாகும்.

தொடக்கக்கால கிறிஸ்தவர்களிடையே 'இருப்போர் இல்லாதோர் என்ற பாகுபாடுகள் இல்லை. அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை; எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது. தேவையில் உழல்வோர் எவரும் அவர்களுள் காணப்படவில்லை. அது அவரவர் தேவைக்குத் தக்கவாறு பகிர்ந்து கொடுக்கப்படும்" (திப. 4: 32,34). இத்தகைய கிறிஸ்தவ சாட்சிய வாழ்வைப்பற்றி சிந்திக்க கிறிஸ்துவின் உயிர்ப்பு நம்மை அழைக்கின்றது.

நாம் உயிர்ப்பின் மக்களாக, பகிர்தலிலும், ஒற்றுமையிலும், ஒருவருக்கொருவர் உதவி செய்து சாட்சிகளாக வாழ முடிகிறதா? அல்லது நலிந்தவர்கள், ஏழைகள், எளியவர்கள், கைவிடப்பட்டோர், புறக்கணிக்கப்பட்டோர், அனாதைகள், நோயுற்றோர், தனிமையில் தவிப்போர் இவர்களைப்பற்றி கவலைப்படாமல் சுயநலத்துடன் நாம் செல்வங்களை அபகரித்து, சேர்த்து வைத்து, நாங்கள் செல்வந்தர்கள் எனவும், அவர்கள் ஏழைகள் என்ற பாகுபாடுடன் வாழ்கிறோமா?

இன்றைய சமூகம் பேராசையினால், ஊழல் செய்து, பணம் சேர்த்தல், ஏழைகளைப்பற்றி அக்கறைக் கொள்ளாமல் சுயநலத்தோடு வாழ்வதில் போராடிக் கொண்டிருக்கிறது. ஆனால் தொடக்க திருஅவை கிறிஸ்தவர்கள் ஒற்றுமையுடனும், தங்கள் உடமைகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்துக்கொண்டும், எல்லோருக்கும் குறைவில்லாமல் நிறைவாய் வாழ்ந்தனர். உயிர்த்த ஆண்டவர்மேல் கொண்டிருந்த நம்பிக்கையில் இருப்போர் இல்லாதோர் என்ற பாகுபாடுகள் வேரூன்றிய சமூகத்தை உருவாக்க உற்சாகம் தந்தது. இந்த சகோதர உணர்வு இன்று அதிகமாக தேவைப்படுகின்றது. கிறிஸ்தவ மனநிலையுடன் நம்மை இணைத்து,

மகிழ்ச்சியான கிறிஸ்தவர்கள், நம்பிக்கையான கிறிஸ்தவர்கள், பிறரன்பில் வேரூன்றிய கிறிஸ்தவர்கள் என வாழ வேண்டும். மகிழ்ச்சியான கிறிஸ்தவர்கள், உயிர்த்த கிறிஸ்தவர்களின் மகிழ்ச்சி நம் வாழ்வைப் பிரதிபலிக்க வேண்டும். உயிர்ப்பால் நம்பிக்கைக் கொண்டோர் கிறிஸ்தவ மகிழ்ச்சியை கொண்டாட வேண்டும். இது வெறும் வெளியடையாளக் கொண்டாட்டமல்ல, மாறாக மரணத்தை வென்று, உயிர்த்த கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொள்வோரின் மகிழ்ச்சியாகும். போர்களும், மரணங்களும், வறுமையும், பசிப்பிணியும் நிறைந்த உலகில் கிறிஸ்துவின் மகிழ்ச்சி பிறருக்கு நம்பிக்கையின் அடையாளமாக மாற வேண்டும். மகிழ்ச்சியான கிறிஸ்தவர்கள் என்றால் பல்வேறு துன்பங்களையும், சவால்களையும் தினம்தினம் அன்றாட வாழ்க்கையில் கொண்டாட வேண்டும். புன்முறுவலுடன் இனிய சொற்களால் பிறருக்கு நம்பிக்கையை கொடுப்பவர்களாகவும், அன்பானவர்களாகவும் வாழ வேண்டும்.

நம்பிக்கையான கிறிஸ்தவரின் வாழ்க்கை, மனஉறுதியோடும் துணிச்சலோடும் வாழ்ந்து, பிறருக்கு முன்மாதிரியாக துணிவுடனும், மனஉறுதியுடனும் வாழ வேண்டுமென கற்றுக் கொடுப்பவர்கள். உயிர்ப்பின் மக்கள் துன்பங்களில், சிரமங்களில் துவண்டுபோவதில்லை, தேவைகளால் நொருக்கப்படுவதில்லை, மாறாக கடவுளின் வார்த்தையால் நம்பிக்கைக் கொண்டு மனஉறுதியுடன் போராடி வாழ்கின்றனர்.

பிறரன்பிற்கும், ஒற்றுமைக்கும், பகிர்தலுக்கும் உயிர்த்த ஆண்டவரின் வல்லமையோடு தொடர்புக்கால கிறிஸ்துவின் முன்மாதிரியோடும், புதிய சமுதாயத்தை உருவாக்க உறுதி கொள்வோம். உயிர்த்த ஆண்டவரின் மகிழ்ச்சி நம் இல்லங்களை நிரப்பி நம்மை உயிர்ப்பின் சாட்சிகளாக வாழ வழிசெய்யும்.

உயிர்த்த இயேசுவின் மகிழ்ச்சி, நம்பிக்கையில் வாழ நம்மை பலப்படுத்தட்டும்.

என்றும் அன்புடன்
அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

02.04.2025 பவோலா நகர் புனித பிரான்சிஸ் - திருப்பலி 02

06.04.2025 தவக்காலம் 5ம் ஞாயிறு - திருப்பலி 03

07.04.2025 புனித ஜான் பாப்டிஸ்ட் - திருப்பலி 04

11.04.2025 புனித ஸ்தனிஸ்லாஸ் - திருப்பலி 05

13.04.2025 குருத்து ஞாயிறு - திருப்பலி 06

20.04.2025 ஆண்டவரின் உயிர்ப்பு ஞாயிறு - திருப்பலி 08

27.04.2025 பாஸ்கா காலம் 2ம் ஞாயிறு, இறை இரக்கத்தின் ஞாயிறு 09

28.04.2025 மான்போர்ட் நகர் புனித லூயிஸ் - திருப்பலி 10

29.04.2025 சியன்னா நகர் புனித கத்ரீன் - திருப்பலி 11

30.04.2025 புனித ஐந்தாம் பயஸ் - திருப்பலி 12

சிலுவைப் பாதை 14

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

வாழ்வை மாற்றும் புனித வாரம் 21

உயிர்ப்பின் மக்களாய் வாழ்வோம் 23

புனித மாற்கு - வாழ்வு தரும் பாடம் 25

திருஅவைச் செய்திகள் 27

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

## 02.04.2025 பவோலா நகர்ப் புனித பிரான்சிஸ் திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் அலெக்ஸ்

அன்புமிக்க சகோதர சகோதரிகளே, இன்று நாம் பவோலா நகர் புனித பிரான்சிஸ் அவர்களின் நினைவு நாளை சிறப்பிக்கின்றோம். நமது புனிதரின் பெற்றோர்கள் குழந்தை பாக்கியமின்றி சமூகத்தின் முன்பு இகழ்ச்சிக்குரியவர்களாக வாழ்ந்து வந்தார்கள். அப்போது புனித பிரான்சிஸ் அசிசியாரிடம் குழந்தைப் பேற்றிற்காக மன்றாடினார்கள். புனிதரின் ஆசிரால் 1416ம் ஆண்டு இத்தாலி நாட்டில் உள்ள பவோலா என்ற இடத்தில் இந்தப் புனிதர் பிறந்தார். இவரது பெற்றோர்கள் இவருக்கு பிரான்சிஸ் என்று பெயரிட்டார்கள். இவர் பிறந்தபோதே ஒரு கண் பார்வையின்றி பிறந்தார். மீண்டும் இவரது பெற்றோர்கள் புனித பிரான்சிஸ் அசிசியாரிடம் குழந்தை பிரான்சிஸ்க்கு பார்வை கிடைக்கும் படியாகவும், பார்வை கிடைத்தவுடன் நன்றியாக ஓராண்டு முழுவதும் துறவு ஆடை அணிவித்து வாழச்செய்வோம் என்று நேர்ச்சை நேர்ந்தார்கள். புனிதருக்கு கண் பார்வை கிடைத்தது.

பெற்றோரின் நேர்ச்சையை நிறைவேற்ற புனிதர் 13வயதில் துறவற மடத்திற்குச் சென்று தமது செபம், பிறரன்பு மற்றும் ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கை முறையால் இறைவனுக்கு ஏற்புடையவரானார். "சிறியோரின் சபை" என்ற துறவற சபையை ஆரம்பித்தார். பிற்காலத்தில் நடக்க இருப்பதை முன்கூட்டியே சொல்லும் அருளைப் பெற்றிருந்தார். தேவமாதாமீது அதிக பக்தி கொண்டிருந்தார். கொள்ளை நோயைத் தடுத்தார், திருத்தந்தைக்கு கீழ்ப்படிந்து பிரான்ஸ் நாட்டிற்குச் சென்று பேரரசர் 11ம் லூயிஸ் அரசரின் நல் மரணத்திற்கு தயாரித்தார். நாம் தவம் செய்வோமானால், கடவுள் நம் பாவநாட்டங்களை அடக்குவார் என்று கூறிய புனிதர் திருப்பாடுகளின் வெள்ளியன்று, இயேசுவின் பாடுகளை வாசிக்கச் சொல்லி, அதைக் கேட்டுக் கொண்டே 1507ம் ஆண்டு இறந்தார். திருத்தந்தை 10ம் சிங்கராயர் 1519ல் இவரை புனிதராக உயர்த்தினார். இவர் கருத்தரிக்க இயலாதவர்களின் பாதுகாவலர் என்றும் அழைக்கப்படுகிறார். இவரின் ஆழ்ந்த நம்பிக்கையை நாமும் பின்பற்றி இறைவன்மீது முழு நம்பிக்கைக்கொண்டவர்களாக வாழ இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. படைப்பின் பரமனே எம் இறைவா, உமது திருவுளத்தை அகிலமெங்கும் அறிவிக்கும் எம் திருஅவையை ஆசீர்வதித்தருளும். குறிப்பாக எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொது நிலையினர் உமது ஞானத்தாலும், தூய ஆவியாரின் துணையோடும் எங்களை வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்புத் தெய்வமே, இந்திய திருநாட்டையாளும் குடியரசுத்தலைவர், பாரதப்பிரதமர், நாட்டின் முதலமைச்சர், பாராளுமன்ற, சட்டமன்ற

உறுப்பினர்களாகிய இவர்களை தீயச் சிந்தனைகள், தீயச்செயல்கள் எதுவும் அணுகாமல் அவர்கள் மக்களின் வாழ்வின் மேன்மையை உணர்ந்து கடமையாற்றிட வேண்டிய நல்ல ஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்புத் தந்தையே இறைவா, கருத்தரிக்க இயலாத தம்பதியருக்காக எம் புனிதர் பிரான்சிஸ் வழியா செபிக்கின்றோம். அந்த தாய்மார்களுக்கு தைரியமான மனதிடத்தையும், கருத்தரிக்கக்கூடிய உடல் ஆரோக்கியத்தையும் தந்து வாழ்வில் நிறைவான மகிழ்ச்சியை அவர்களுக்கு அருளித்தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 06.04.2025 தவக்காலம் 5ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. எசா 43: 16-21 II. பிலி. 3: 8-14 யோவா 8: 1-11

இறை கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு திருவழிபாட்டை சிறப்பிக்க ஒன்றுக்கூடியுள்ளோம். பாபிலோனில் அடிமைப்பட்டுக்கிடந்த யூத மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் எசாயா இந்த இறைவார்த்தைகளை அறிவிக்கிறார். அடிமைத்தனத்திலிருந்து இறைவன் தன் மக்களை மீட்டு சொந்த வீடான எருசலேமில் புதுவாழ்வு வாழ அழைத்துச்செல்வார் என்ற ஒரு புதிய நம்பிக்கையை யூத மக்களிடம் ஏற்படுத்துகிறார். இரண்டாம் வாசகத்தில் கிறிஸ்தவர்கள் உறுதியான கடவுள் நம்பிக்கைக்கொண்டு வாழவேண்டுமென்று தன்னுடைய கடவுள் அனுபவத்தின்மூலம் பிலிப்பியர்களின் நம்பிக்கையை வளர்த்தெடுக்கிறார். கிறிஸ்துவின் பொருட்டு அனைத்தையும் குப்பையெனக் கருதுங்கள் என்கிறார் புனித பவுலடிகளார். இன்றைய நற்செய்தியில் இயேசு விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண்ணிற்கு மனமாற்றத்தை ஏற்படுத்தவும், தன்னுடைய மன்னிப்பை வழங்கவும், பரிசேயர்களைப் பார்த்து "உங்களில் பாவம் இல்லாதோர் முதல் கல்லை எரியட்டும் என்று கூறுகிறார்.

இங்கு இயேசு பாவிகளைத் தண்டிப்பதற்காக அல்ல, மாறாக மன்னித்து ஏற்றுக்கொள்வதற்காகத்தான் வந்தேன் என்று உணரச் செய்கின்றார். பாவிகளை நண்பர்களாக்குவது பரமன் இயேசுவின் முக்கிய பண்பாகும். இங்கு மனம் வருந்துபவர்களுக்கு மன்னிப்பு கட்டாயம் உண்டு. ஏனெனில் மன்னிப்பும், மனமாற்றமும் இறைவனைச் சார்ந்தது. மன்னிப்புபெற வேண்டிய மனநிலையும், மாற்றத்திற்கான சூழ்நிலை மட்டும் மனிதனைச் சேர்ந்தது. இங்கு இறுதியில் அந்தப்பெண்ணும் இயேசுவும் மட்டும் அங்கிருந்தனர். இரக்கமும் இரக்கப்படவேண்டிய ஒன்றும் இங்கு இருந்தன. நம் குடும்பங்களில் கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறவர்களாக நாம் மாறவேண்டும். கிறிஸ்துவிற்காக எல்லாவற்றையும் குப்பையாகக் கருதி மனம்மாற இறைவனின் ஆசி பெற இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எனக்கு தொண்டு செய்வோருக்கு தந்தை மதிப்பளிக்கிறார் என்ற இயேசுவின் இறைவார்த்தைக்கேற்ப பணிவிடை செய்ய அழைக்கப்பட்டுள்ள எம் அருட்பணியாளர்கள், துறவியர் இவ்வுலகம் தருகின்ற தீய நாட்டங்களில் மனதைச் செலுத்தாமல், இறையாட்சிக்கு உரிய வழியில் நாளும் நடந்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. கருணைக்கடலே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் அவரவர் இடத்தைப்பற்றிக்கொண்டு, சுயநலத்தோடு வாழாமல், மக்களின் தேவைகளை உணர்ந்து அவர்கள் வாழ்வு மேம்பட மேலானத் திட்டங்களை செயல்படுத்தி, நாட்டு மக்களுக்காக செயல்பட வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. தன் தாயின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தவரே, இன்றைய காலச்சூழலில் பெண்களை ஒரு போதைப்பொருளாக, அடிமைகளாக நடத்துபவர்களுக்கு இறைவன் தாமே நல்லதொரு ஞானத்தைத் தந்தருளவும், அவர்களுக்குரிய தகுதியைத் தந்து வழிநடத்த வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. கோட்டையும் அரணுமான இறைவா, வெளிநாடுகளில் பணிபுரியும் மாந்தர்களை உம்பதம் ஒப்படைக்கின்றோம். அவர்களுக்கு எந்தவொரு தொந்தரவும், ஆபத்து, விபத்தும் நேராதபடிக்கு, போதுமான உடல்பலமும், ஆன்ம பலமும் தந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 07.04.2025 புனித ஜான்பாப்டிஸ்ட் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் உரோமை நகர் புனித பிரான்சிஸ் அவர்களின் நினைவைக் கொண்டாடுகிறோம். சிறுமி பிரான்சிஸ் தனது 11 வயதில் இருந்தே துறவியாக வேண்டுமென்ற எண்ணத்தில் வாழ்ந்து வந்தவர். அந்த தேவ அழைத்தலை உணர்ந்தவராய் தன் தந்தையிடம் தெரிவித்தபோது, அவரது முடிவு நிராகரிக்கப்பட்டு, திருமணம் செய்து வைக்கப்பட்டார். இருப்பினும் இல்லற வாழ்வில் கடமை தவறாமல் வாழ்ந்தாள். தனது கணவரின் இறப்பிற்குப் பின் தனது குடும்பப் பணியில் மேலும் அக்கரையோடு செயல்பட்டார். துறவறத்திற்கு ஒப்பான வாழ்வைக் கடைப்பிடித்து துறவற சபையைத் துவங்கி அதன் வழியில் இறைப்பணியாற்றினார். நம் எண்ணமன்று, கடவுளின் எண்ணமே இறுதியானது என்பதை இப்புனிதையின் வாழ்வில் நாம் அறிந்து கொள்ளலாம். இன்றைய நற்செய்தி வாசகம் நமது பாவ நிலையையும், இறைவனின் இரக்கத்தையும் நன்கு பறைச்சாற்றுகிறது. கடவுளின் முன்னிலையில் எல்லா மனிதருமே பாவிகள்தான். இந்த உணர்வை நம்மில்

எழுப்பவும் நாம் நம் வாழ்வை மாற்றியமைக்கவும் இந்த தவக்காலத்தில் தொடர்ந்து திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் ஆழத்தைக் காட்டிய இறைவா, எம் திருஅவைக்காகவும், திருத்தந்தைக்காகவும் மன்றாடுகிறோம். திருஅவைக்காக உழைக்கின்றவர்களுக்கு நீரே பக்கபலமாய் நின்று வழிநடத்தவும், பணியில் ஏற்படும் தடைகளைத் தகர்த்து நீதியோடும் நேர்மையோடும் செயல்பட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நம்பினோர் ஒருபோதும் கைவிடப்படுவதில்லை என்றவரே, உம்மீது ஆழ்ந்த நம்பிக்கையோடு நாங்கள் செய்கிற எந்தவொரு செயலும் பொய்த்துப் போவதில்லை. அது எப்போதும் நமக்கு வெற்றியே என்பதை உணர்ந்து, எங்களது நம்பிக்கையை ஆழப்படுத்த வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. ஆண்டவராகிய இயேசுவே, எம் வாழ்க்கையில் நாங்கள் சந்திக்கின்ற அச்சம், அவமானம், கலக்கம், குழப்பம், துயரம், சாவு போன்றவைகளில் எங்களின் நம்பிக்கை இழந்துவிடாமல் உம்மைப் பற்றிக்கொள்ள அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 11.04.2025 புனித ஸ்தனிஸ்லாஸ் திருப்பலி

**முன்னுரை**

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

அன்புக்குரியவர்களே, கத்தோலிக்கத் திருஅவை இன்று கிராக்கோ ஆயரான புனித ஸ்தனிஸ்லாஸ் நினைவு நாளைக் கொண்டாடுகிறது. போலந்து நாட்டில் உயர்குலப் பெற்றோரின் மகனாக 1030ஆம் ஆண்டு பிறந்த இவர், இறையன்பால் குருத்துவ வாழ்வைத் தேர்ந்துக் கொண்டார். இவரது சிறப்பான மறையுரைகள் கிறிஸ்தவர்கள் அறநெறி வழுவாமல் வாழ உதவி செய்தன. பல்வேறு சீர்த்திருத்த முயற்சிகளில் வெற்றி பெற்றதால், 1072ஆம் ஆண்டில் கிராக்கோ மறைமாவட்டத்தின் ஆயராக இவர் உயர்த்தப்பட்டார். புனித ஸ்தனிஸ்லாஸ் ஆயராகப் பொறுப்பேற்றதும், சமூகத்தில் நிகழ்ந்த அநீதிகள் அனைத்துக்கும் எதிராக குரல் கொடுத்தார். போலந்து அரசன் பொலஸ்லாஸ் மக்களுக்கு இழைத்து வந்த கொடூரங்களைக் கண்டித்தார். அரசன் ஒரு பெண்ணைக் கடத்திச் சென்ற வேளையில் அவனைத் திருஅவையிலிருந்து விலக்கினார். இதனால் ஆத்திரமடைந்த அரசன், ஆயர் ஸ்தனிஸ்லாஸ் திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்த வேளையில் அவரைக் கொலை செய்தான். புனித ஸ்தனிஸ்லாசைப் போன்று, நாமும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் துணிவுபெற இத்திருப்பலியில் உருக்கமாக வேண்டுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நீதியின் அரசரே இறைவா, உமது திருஅவையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், சமூகத்தில் நிகழ்கின்ற அநீதிகளுக்கு முடிவுகட்டத் துணிவுடன் உழைக்க உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. உண்மையின் அரசரே இறைவா, உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் அனைவரும் உமக்கு உண்மையுள்ளவர்களாய் வாழ்ந்து, தங்கள் சமூகத்தில் நீதியை நிலைநாட்டும் பொறுப்பை உணர்ந்து செயல்பட உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் அரசரே இறைவா, இந்திய நாட்டை ஆட்சி செய்ய மக்கள் தேர்ந்தெடுக்க இருக்கும் தலைவர்கள் அனைவரும், நேர்மையான வழியில் நடந்து நாட்டை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்ல உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 13.04.2025 குருத்து ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. சாம்சன்

I. எசா. 43: 16-21 II. பிலி. 3: 8-14 யோவா. 8: 1-11

ஆண்டவரின் பாடுகளின் ஞாயிறைக் குருத்து ஞாயிறாக கொண்டாடப்படுகிறது. இன்றைய இரண்டு வாசகங்களும் நற்செய்தி வாசகமும் இறைவனின் திருப்பாடுகளை நமக்கு நினைவூட்டுகிறது. நமது துன்பத்தை கிறிஸ்துவின் பாடுகளோடு இணைத்து மீட்பின் சக்தியாக மாற்றுவோம். யூதர்கள் இந்த மாதத்தை "நிசான்" அதாவது முதல் மாதம் என்று அழைக்கிறார்கள். ஆட்டை பலியிட்டு கொண்டாடும் பாஸ்கா விழாவைக் குறிக்கும். பலியிடப் போகும் ஆட்டினை, நான்கு நாட்களுக்கு முன்பே தேர்ந்தெடுத்து புனித வெள்ளியன்று பலியிடுவர். இதுவே இயேசு தம்மையே பலியிடுகின்ற செம்மறி விழாவாகும்.

இறைவாக்கினர் செக்கரியாவின் இறைவாக்கை நிறைவேறுகிற வகையில் கழுதையின்மீது அமர்ந்து வருகிறார் கழுதை தாழ்ச்சியின் அடையாளம், ஒதுக்கப்பட்டவர்களின் சின்னம், அடிமையின் விலங்கு, அமைதியின் சிகரம், பொதுவாக வெற்றிப் பெற்றவர்கள் தன்னை அரசனாகக் காண்பித்துக் கொண்டவர்கள் குதிரையின்மீது தான் பவனி வருவார்கள் ஆனால் இயேசு அனைத்தையும் தலைகீழாக்கினார். இயேசுவை அரசராக ஏற்றுக் கொண்ட மக்கள் அவர்கள் செயல்கள் வழியாக காண்பிக்கின்றனர். வழிகளில் தங்கள் மேலுடைகளை விரித்து அரசருக்கு தங்கள் மரியாதையை செலுத்துகின்றனர். ஒலிவமரம் என்றாலே வெற்றியில் அடையாளம். அதன் கிளைகளைத் தரித்து வெற்றுக்கீதம் பாடுகின்றனர். இதோ எம் அரசர் எருசலேமுக்குள் நுழைந்து விட்டார் என்று புகழ்கிறார் ஓசான்னா! ஓசான்னா! என ஆர்ப்பரிக்கிறார்கள்.

கிறிஸ்து உலகிற்கு வந்தபோது, பலியையும், காணிக்கையையும் நீர் விரும்பவில்லை. ஆனால் ஓர் உடலை எனக்கு அமைத்துத் தந்தீர். எரிபலிகளும் பாவம் போக்கும் பலிகளும் உமக்கு உகந்தவையல்ல. எனவே, நான் கூறியது: "என் கடவுளே, உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகின்றேன்" என்கிறார் (எபி.10: 5-7). இந்த திருவுளத்தால்தான் இயேசு கிறிஸ்து ஒரே ஒருமுறை தம் உடலைப் பலியாகச் செலுத்தியதின் மூலம் நாம் தூயவராக்கப்பட்டிருக்கிறோம். (எபி. 10:10) தாழ்ச்சியில்தான் கடவுள்மீது நாம் வைத்திருக்கிற விசுவாசத்தின் ஆழம் வெளிப்படுகிறது. தாழ்ச்சியால்தான் கடவுளின் வல்லமை வெளிப்பட இருக்கிறது. அப்படிப்பட்ட தாழ்ச்சியை நாம் நம் வாழ்வின் அணிகலாகக்கொள்ள அழைக்கப்படுகிறோம். குறிப்பாக, துன்பங்கள் வருகின்றபோது தாழ்ச்சியாக ஏற்றுக்கொள்ளும்போது, கடவுளின் மாட்சி நம் வழியாக வெளிப்படும். கடவுள் எப்போதும் நம்மைக் கைவிட மாட்டார். எந்நாளும் அவர் நம்மோடு இருக்கிறார். நம் துன்பத்தில் பங்கெடுக்கக் கூடியவராக இருக்கிறார் நாம் கடவுளின் அன்பை முழுமையாக உணர்கிறவர்களாக நமது வாழ்வை அமைத்துக் கொள்வோம். நம்மாலான உதவிகளை பிறருக்கு செய்து இந்த புனித வாரத்தில் நுழைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் ஆயனே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருதந்தை, கர்தினால், ஆயர்கள், அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் இவர்களை ஆசிர்வதிக்க வேண்டுமென்றும், குறிப்பாக எம் திருத்தந்தைக்கு உமது தூய ஆவியாரின் அருட்கொடையால் நிரந்தர சுமளித்து, உமது பணியினைத் தொடர்ந்து செயல்படுத்த வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம் .

2. அன்பின் அரசரே இறைவா, நாட்டையாளும் தலைவர்கள், தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியை நேர்மையாகவும், பாரபட்சமின்றி, ஏற்றத்தாழ்வுகளின்றி மக்களின் தேவைகளையறிந்து பணி செய்ய வரம் அருள உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் இறைவா, இளைஞர்கள் இளம் பெண்களை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் தங்களின் மனம்போன போக்கில் வாழாமல் பெற்றோருக்கு கீழ்படிந்து, எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையானவற்றை நேரிய வழியில் தேர்ந்தெடுக்கக் கூடிய நல்ல ஞானத்தை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பின் மருத்துவரே இறைவா, மனநோயாலும், தீராத நோய்களாலும் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளிலும், வீடுகளிலும், துன்பப்படுவோரை நீர் கனிவோடு கண்நோக்கி அவர்களுக்கு நல்ல உடல் உள்ள நலத்தை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 20.03.2025 ஆண்டவரின் உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

I. தி.ப. 10: 34, 37-43 II. கொலோ. 3: 1-4 யோவா. 20: 1-9

துன்பங்கள் மறைந்து இன்பமாக வாழும் நாள், காரிருள் ஒழிந்து ஒளி உதயமான நொள், சாவு முறியடிக்கப்பட்டு வாழ்வாக உருமாறிய நாளை, இன்று தாயாம் திருஅவையானது மரணத்தை வென்ற மாமன்னன் இயேசுவின் உயிர்ப்பு விழாவினைச் சிறப்பிக்கும் இன்னாளில் நற்செய்தியாளர்களின் கண்ணோட்டத்தில் இயேசு சிலுவையில் இறக்கவில்லை மறாாக உயர்த்தப்பட்டார், உயிர்ப்பின் மகிமையைப் பெற்றார். இயேசு உயிர்ப்பின்மூலம் சாவின் கொடுக்கை முறியடித்துவிட்டார். "சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே" (1கொரி.15: 55) என்று மரணத்தை மண்டியிடச் செய்தார்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு நமது கிறிஸ்துவ நம்பிக்கையின் அடிப்படை முதன்மையான மூன்று சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது. **முதலாவதாக:** இயேசுவின் உயிர்ப்புதான் கிறிஸ்தவ மதத்தின் வாழ்க்கையின் அடிப்படை நம்பிக்கையாக இருக்கிறது. "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லையென்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாக இருக்கும் என்று புனித பவுலடியார் கூறுகிறார் (1கொரி. 15: 12-14). **இரண்டாவதாக:** இயேசு உயிர்த்தெழுந்ததால் நமக்கும் உயிர் உண்டு என்ற நம்பிக்கையை கொடுக்கிறது. ஏனெனில் அவர் வாழ்வோரின் கடவுள். லாசரின் கல்லறையில் இயேசு மார்த்தாவிடம் உறுதியளித்தார். "நானே உயிர்த்தெழுதலும் வாழ்வுமாயிருக்கிறேன், என்னை நம்புகிறவன் இறப்பினும் வாழ்வான்" (யோவா.11: 25-26). **மூன்றாவதாக:** இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது துன்பங்கள், வேதனைகள், சோதனைகள் அனுபவித்து இறந்தார். அதுபோல நம்முடைய வாழ்விலும் நமக்கு ஏற்படுகின்ற துயரம், கஷ்டம், வேதனை மற்றும் கண்ணீர் நிறைந்த வாழ்க்கைக்கு இயேசுவின் உயிர்ப்பு நம்பிக்கையை அளிக்கிறது. இறைவன் நம் வாழ்விலும் உயிர்ப்பைக் கொணர வேண்டுமென்றால் நமது கல்லான இதயத்தை மாற்றி கனிவான உள்ளத்தைப் பெற்று மகிழ்வின் சாட்சிகளாய், நல்லுறவின் அன்பர்களாய் இறைவனில் உயிர்ப்போம் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு இத்திருப்பலியில் பங்கெடுத்து பயன்பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் தாய் திருஅவையின் பணியாளர்கள் அனைவரும் இந்த ஏழு புனிதர்கள் வாழ்ந்த சாட்சிய வாழ்வை வாழ்ந்து இறை மக்களை இறைவன்பால் ஈர்த்து புதுயுகம் காண புத்தாண்டில் மலர வளர உம்மை மன்றாடுகிறோம்

2. பாசத்தால் எம்மை ஈர்க்கும் இறைவா, உலக மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு உமது அன்பு வழியில் பயணிக்கவும் ஒருவரையொருவர் புரிந்துக்கொண்டு விட்டுக்கொடுத்து வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. உறுதிப்படுத்தும் இறைவா, இன்றைய காலக்கட்டத்தில் வாலிப பிள்ளைகள் தங்களின் மனம் போன போக்கில் குடும்பம், சமூகம், உலகு இன்ப நாட்டங்களில் மூழ்காமல் இறைப் பற்றில் ஆழமாக வேரூன்றி வாழ உமது இரக்கம் கருணை வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 27.04.2025 இறை இரக்கத்தின் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. தி.ப. 5: 12-16 II. 1யோவா. 1: 9-11,12-13,17-19 யோவா. 20: 19-31

நம்பிக்கையின் சகோதர சகோதரிகளே! இன்று பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு, இறை இரக்கத்தின் ஆண்டவர் திருவிழாவை திருஅவை கொண்டாடுகிறது. "இயேசு கிறிஸ்து வழியாக வெளிப்பட்ட கடவுளின் இரக்கத்தில் நம்பிக்கை வைத்தால் நாம் மீட்படையலாம்" என்பதே இன்றைய விழா நமக்கு அறிவுறுத்துகிறது . " நான் நேர்மையான நடுவராக வருவதற்கு முன்பாக, நான் முதலில் என்னுடைய இரக்கம் என்னும் கதவை அகலத் திறப்பேன்.இந்த கதவு வழியாக நுழையாதவர், என் நீதி என்னும் கதவு வழியாக நுழைவர். எனது இறை இரக்கத்தின் உருவத்தை வணங்கும் எந்த ஆன்மாவும் அழிவுறாது என்றும் வாக்களிக்கிறேன்" என்று நம் ஆண்டவர் இயேசு, புனித பவுஸ்தினாவிடம் வாக்களித்துள்ளார்.

இயேசு கிறிஸ்துவின் வழியா வெளிப்படுத்தப்பட்டுள்ள "கடவுளின் இரக்கத்தில் நம்பிக்கை வைத்தால் நாம் மீட்படைவோம்." "இயேசு இறைமகன் என்று நம்புவோரைத்தவிர உலகை வெல்வோர் யார்?" என்று திருத்தூதர் யோவான் கேள்வி எழுப்புகிறார். அன்று திருத்தூதர் தோமாவின் பயத்தை போக்குவதற்காக திறந்து காட்டப்பட்ட இயேசுவின் இரக்கம், இன்று நம் ஒவ்வொருவரின் மீட்புக்காகவும் சிறந்து வைக்கப்பட்டுள்ளது. அதில் நுழைந்தால் நாம் வாழ்வைக் கண்டடைய முடியும், ஆனால் நாமும் நம் வாழ்வில் நோய்கள், துன்பங்கள், ஏமாற்றங்கள், வரும்போது நாம் நம்பிக்கை இழக்கின்றோமே? இவை நாமும் உயர்ப்பை நம்பவில்லை என்பதன் அடையாளங்களே. நாம் உயிர்ப்பின் சீடர்கள் என்றால் அனைத்தும் இறைவனில் நிறைவேறும் என்ற நம்பிக்கையில் பக்தியுடன் இத்திருவிழா திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. சாவைவென்று உயிர்த்த மாட்சிமிகு இயேசுவே, தொடக்கக்கால திரு அவையில் இருந்த அதே இறை நம்பிக்கையை எங்களுடைய திருந்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும்

பொதுநிலையினரான எங்களுக்குத் தந்து, பகிர்ந்து வாழும் தாராள உள்ளத்தை எங்களில் வெளிப்பட வேண்டுமென்று இறைவா, உம்மை மன்றாடுகிறோம்.

2. குணமளிக்கும் இரத்த வள்ளலே இறைவா ! திருஅவயின் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் விரைவில் குணமடைந்து மீண்டும் உமது நற்செய்திப் பணியைத் தொடங்கத்தேவையான வரமருள இறைவா மன்றாடுகிறோம்.

3. அறிவின் வழியாய் ஞானம் தரும் இறைவா, அரசுத் தேர்வு எழுதும் மாணவ மாணவிகள் அறிவாற்றலையும், நுண்ணறிவையும் பெற்று, சிறப்பாகத் தேர்வெழுதி அதிக மதிப்பெண்களைப் பெறத் தேவையான ஞானக்கொடைகளை அள்ளித் தரும்படி வேண்டுகிறோம்.

4. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா! இளம் பெண்கள், இளைஞர்கள் சீரிய சிந்தனையும், தொலை நோக்குப் பார்வையும் கொண்டு, தங்கள் எதிர் காலத்தை அமைத்துக் கொள்ள பெரியவர்களின் அனுபவங்களையும் தங்கள் முயற்சிக்குப் பயன்படுத்தி, இறை இரக்கத்தின் அருளைப்பெற்று வாழத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 28.04.2025 மான்போர்ட் நகர் புனித லூயிஸ் திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் சுரேஷ்

பிரான்ஸ் நாட்டில் மான்போர்ட் என்னுமிடத்தில் 1673, ஜனவரி 31 அன்று பிறந்தவர் லூயிஸ். குழந்தை பருவம் முதலே நற்கருணை ஆண்டவர்மீது அளவற்ற அன்பும், பக்தியும் கொண்டிருந்த லூயிஸ் அடிக்கடி ஆலயத்திற்கு சென்று செபிக்கும் பழக்கம் உடையவர். லூயிஸ் 12 வயதில் ரென்ஸ் என்னுமிடத்தில் உள்ள இயேசு சபை கல்லூரியில் படிக்க சென்றார். இவர் இளவயதிலிருந்தே ஏழைகளுக்கு உதவும் பண்பு கொண்டிருந்தார். லூயிஸ் அவர்கள் தமது அழைத்தலின் உண்மையான நோக்கத்தை தனது 32ம் வயதில் லூயிஸ் புரிந்து கொண்டார். இவர் சிறந்த பேச்சாளரான லூயிஸின் எளிய வாக்கியங்கள் மக்களை கவர்ந்தன. நம்ப முடியாத அளவுக்கு ஏழ்மையான எளிய வாழ்வு வாழ்ந்தார். இவருடைய வாழ்வில் 2 முக்கியமான நிகழ்வுகள் நிகழ்ந்தன.

**ஒன்று:** ஒருமுறை லா ரொச்சல்லே என்னுமிடத்தில் போர் வீரர்களுக்கு இறை செய்தியை போதித்தார். அவர் உரையை கேட்ட அனைத்து வீரர்களும் தங்களது குற்றங்களை நினைத்து கதறி அழுதார்கள். **இரண்டு:** பொன்சாத்து என்னுமிடத்தில் கல்வாரி மலையை எழுப்ப 400 பேர் குறைந்தது 15 மாதங்கள் முயன்று கல்வாரி மலையை எழுப்பினார்கள். வேலை முடிய இருந்த தருவாயில் அதனை இடிக்க வேண்டும் என அரசர் கட்டளைப் பிறப்பித்தார். மக்கள் பல்வேறு வழிகளில் முயன்றும் அரசரின் உத்தரவே

வெற்றி பெற்றது. அவ்வாறு இருந்தபோதும் "கடவுள் போற்றப்படுவராக" என்று பதிலுரைத்தார். அனைத்தையும் இறைத்திட்டமென ஏற்றும் பிறருக்காகவே வாழ்ந்த லூயிஸ் 1716ல் ஏப்ரல் 23ல் இறந்தார். இவரை திருத்தந்தை 13ம் சிங்கராயர் அருளாளர் நிலைக்கும், 1947 ஜீலை 13 அன்று திருத்தந்தை 12ம் பத்திநாதர் புனிதர் பட்டத்திற்கும் உயர்த்தினார்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையின் தலைவரே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் ஆகியோர் அனைவரையும் ஆசீர்வதித்து ஏழ்மையான மக்களை வளர்ச்சியின் பாதையில் வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஏழைகளின் பங்காளரே எம் இறைவா, எம் நாட்டில் உள்ள ஏழை எளிய மக்களை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களின் பொருளாதாரம், கல்வி மற்றும் அனைத்து உரிமைகளையும் நாட்டில் பெற்று சிறப்புடன் வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள் என்று மொழிந்த இறைவா, தம் வாழ்வையே நற்செய்தியாக வாழ்ந்து காட்டி எது நடந்தாலும் அனைத்தையும் தம் இலட்சியமாக் கொண்டு வாழ்ந்த எம் புனிதரைப்போல் நாங்களும், உமக்கும் திருஅவைக்கும் சாட்சியுள்ள பிள்ளைகளாக வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 29.04.2025 சியன்னா நகர் புனித கத்ரீன் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. மாலா செபமாலை

ஜியோவோமா பெனிங்காசா மற்றும் லாமா ஆகியோருக்கு 25வது மகளாக சீயன்னாவில் 1347ம் ஆண்டு பிறந்தார் கேத்தரீன். பக்தியில் வளர்ந்த கேத்தரீன் குழந்தைப் பருவம் முதலே காட்சிகள் காணும் வரம் பெற்றிருந்தார். தனது ஏழாவது வயதில் தன்னை முழுவதுமே (கன்னிமையை) இயேசுவுக்கு அர்ப்பணித்தார். பெற்றோருடனான நீண்ட போராட்டத்துக்குப்பின் 16ம் வயதில் புனித சாமிநாதரின் 3ம் சபையில் சேர்ந்து துறவு உடை உடுத்தினார். தனி அறையில் தங்கி எப்போதும் இயேசு கிறிஸ்துவுடன் உரையாடி மகிழ்ந்தார். தீவிர நோயினால் அல்லல்படும் நோயாளிகளுக்குப் பணியாற்றினார், பாவிகள் மனம்மாறிட மன்றாடினார். இவர் உணவு உட்கொள்வதை முற்றிலும் தவிர்த்தார். நற்கருணையை மட்டுமே உணவாக உண்டு வாழ்ந்து வந்தார். உடலுக்குப் போதிய உணவு கிடைக்காததால் உடல் வலுவிழந்தாலும் எப்போதும் மகிழ்ச்சியுடன் திகழ்ந்தார். கத்ரீன் 1370ம் ஆண்டு ஒரு காட்சி கண்டார். அதில் விண்ணகம்-நரகம்-உத்தரிக்கும் நிலை. காட்சியின் முடிவில் குரலொலி ஒன்று கேட்டது. அது "அடைப்பட்டு வாழாமல் பொதுப்பணி செய்யப் புறப்படு" என்றது.

அக்குரலுக்குக் கீழ்ப்படிந்த கத்ரீன் பிளேக் என்னும் கொடிய நோயினால் மக்கள் செத்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவர்களுக்கு மருத்துவப் பணி செய்தார். ஆண்டவர் இயேசு கிறிஸ்து காட்சி கொடுத்து தமது 5 காயங்களையும் கத்ரீனுக்கு அருளினார். திருஅவை இக்கட்டான நிலையில் இருந்தபோது "திருஅவைக்கு பணிந்து நடக்க வேண்டும்" என்று பல இடங்களுக்குச் சென்று அறிவுறுத்தினார். "சமாதானப் புறா" என அழைக்கப்பட்ட கத்ரீன் 1377ம் ஆண்டு சமாதானத் தூதுவராக திருத்தந்தை இவரை பிளாரன்சுக்கு அனுப்பினார். அங்கு ஏற்பட்ட கலகம் ஒன்றில் சிக்கிய கத்ரீன் குற்றுயிராகி பல நாட்கள் துன்பப்பட்டு உரோமையில் 1380ம் ஆண்டு 29ம் நாள் தமது 33ஆம் வயதில் இறையடிச் சேர்ந்தார். இவரின் கீழ்ப்படிதலை நம்முடைய வாழ்வில் முன்மாதிரியாகக் கொண்டு, இறைவனின் குரலுக்குச் செவிசாய்க்கக் கூடிய ஞானத்தையும், ஆற்றலையும் பெற்றிட இத்திருப்பலி வழியாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. விண்ணகத் தந்தையே இறைவா, உம்மால் திருப்பொழிவு செய்யப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அனைவரும் உமது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நோயுற்றவர்களுக்கும், துன்பப்படுவோர்க்கும் அயராது பணிபுரிந்த புனிதைப்போல், இவர்கள் வாழ்வில் ஏற்படும் அனைத்து இடையூர்களிருந்தும் பாதுகாத்து வழிடத்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் தந்தையே இறைவா, உமது திருஅவையை அழித்து வந்த சவுலை பவுலாக மாற்றி திருஅவையைப் பாதுகாக்கும் வலிமையை அவருக்குக் கொடுத்தீரே. அதுபோல் எம் இளம் வாலிபப் பிள்ளைகளையும் எல்லா உலக மாயையிலிருந்தும் தீவினைகளிலிருந்தும் மீட்டு உம் பணி புரிய அவர்களுக்கு மனமாற்றத்தைக் கொடுக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் தந்தையே இறைவா, என்னிடம் வருபவர்களை நான் புறம்பே தள்ளமாட்டேன் என்று கூறிய இயேசுவே, உமது பாதம் சரணடைந்துள்ள எம்மை, இக்கொடிய கொள்ளை நோயிலிருந்தும், பசிப்பிணி, பஞ்சம் போன்றவற்றிலிருந்து எம்மையும், நாட்டையும் காத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 30.04.2025 புனித ஐந்தாம் பயஸ் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இயேசு கிறிஸ்துவில் பிரியமானவர்களே, நமது திருஅவை இன்றைய நாளில் திருத்தந்தை புனித 5ம் பத்திநாதரின் நினைவு நாளைச் சிறப்பிக்க நம்மை அழைக்கின்றது. திருத்தந்தை இத்தாலியின் போஸ்கோ நகரில் ஜனவரி 17,1504ல் பிறந்தவர். தனது 19வது வயதில் குருப்பட்டம்

பெற்றார். புனித சுவாமிநாதரின் சபைக் குருவாக இருந்தார். சபையில் மற்ற துறவிகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். பின்னர் 16 வருடங்கள் இறையியல், தத்துவ இயலில் அறிஞராகவும் தன் பணியைத் திறம்படச் செய்தார். பின்னர் ஆயராகி, கர்தினால் பட்டமும் பெற்று சிறப்பாக சேவைச் செய்தார். திருத்தந்தை இறந்ததும் இவரைத் திருத்தந்தையாக 1566ல் தேர்ந்தெடுத்தார்கள். பின்னர் திருத்தந்தையாக இருந்தும் தவவாழ்வு வாழ்ந்தார்.

கிறிஸ்துவத்தை ஒழித்து ஐரோப்பாவைக் கைப்பற்றும் நோக்கத்துடன் துருக்கியர்களுக்கும் கிறிஸ்துவ வீரர்களுக்கும் போர் மூண்டபோது துருக்கிய படை அதிகளவில் இருந்ததைக் கண்டு அன்னையிடம் இடைவிடாமல் செபமாலை செபிக்க, மக்களை வழிநடத்தி அதன்படி வெற்றியும் கண்டார். அதன் பயனாக புனித செபமாலை மாதாவின் திருநாளையும் அறிவித்து மாதாவைச் சிறப்பித்தார். கடின உழைப்புக்கு இடையிலும் இருவேளை திருப்பேழையின்முன் முழங்கால் படியிட்டு தியானம் செய்வார். நோயாளிகளைச் சந்தித்தும், இல்லங்களைச் சந்தித்தும் ஏழை மக்களுக்கு ஏராளமான உதவிகளைச் செய்தும் சேவை செய்தார். 1.5.1572ல் இத்தாலியின் "பப்பல்" மாநிலத்தில் இயற்கை எய்தினார். 22.5.1712ல் புனிதர் பட்டம் திருத்தந்தை 11ம் கிளமெண்ட் என்பவரால் அளிக்கப்பட்டது. எக்காலத்திலும் இறை அன்னையின் திருச்செபமாலை உலகைக் காப்பாற்றும் என்ற சிந்தனையுடன் இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு இறைவா, உம் வழிவரும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் ஒவ்வொருவரையும் உமது தூய ஆவியின் வல்லமையால் நிரப்பி அவர்களின் பணிகளை நிறைவாக செய்ய அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. வரமருளும் இறைவா, இறை அன்னையின் மாட்சியை உணர்ந்து இக்கட்டான சூழ்நிலையில் உம்மை நாடி செபமாலையைக் கையிலேந்தி வெற்றிக்கண்ட எம் திருத்தந்தை புனித ஐந்தாம் பத்திநாதரைப் பின்பற்றி இக்காலச் சூழலை வெற்றிக்கொள்ள வேண்டிய ஆற்றலை பொழிந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளிக்கும் வள்ளலே எம் இறைவா, உலகெங்கும் பரவிவரும் கொள்ளை நோயான "கொரோனா" என்னும் அரக்கனிடமிருந்து உம் மக்களைக் காப்பாற்ற உம்மைத் தவிர வேறு ஒருவருமில்லை என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு செபிக்கும் உம் பிள்ளைகளுக்கு ஆறுதலாக இருந்து நோயினைக் குணப்படுத்தி வாழ்வளிக்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## சிலுவைப் பாதை

திரு. லூயிஸ் பரிமணன் ஜோசப்

**முதல்வர்:** தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே!

**அனைவரும்:** ஆமென்.

**தொடக்கச் செபம் :** சிலுவைப்பாதை என்பது துன்பத்தின் பாதை, கரடு முரடான பாதை, கண்ணீரின் பாதை மட்டுமல்ல, இது இயேசுவின் அன்பையும் தியாகத்தையும் எடுத்துரைக்கும் அன்புப் பாதை. "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (மாற்கு 8: 34) என்ற இயேசுவின் குரல்கேட்டு, அவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, நம்மை சுமை தாங்கிகளாக அவரைத் தொடர அழைக்கும் பாதை. இது தவக்காலத்தில் மட்டும் நாம் நடத்தும் பாதையல்ல, ஒவ்வொரு நாளும் நாம் நடக்க வேண்டியப் பாதை என்பதை நாம் உணர்ந்தவர்களாக, இயேசுவின் பாடுகளை தியானித்து, கல்வாரி மலையில் உச்சம் தொட்ட அவரது அன்பினைச் சுவைக்க திறந்த உள்ளத்தோடு இச்சிலுவைப் பாதையில் இயேசுவைப் பின்செல்வோம்.

**பாடல்:** பழிகளை சுமத்தி பரிகசித்தார், உயிர் பறித்திட எண்ணித் தீர்ப்பளித்தார் எனக்காக இறைவா எனக்காக! இடர்பட வந்தீர் எனக்காக!

### 1. இயேசு அநியாயமாக தீர்ப்பிடப்படுகிறார்

**முதல்வர்:** அன்பு நிறை இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

**அனைவரும்:** ஏனெனில் உமது பாரமான திருச்சிலுவை மரணத்தால் எங்களை மீட்டருளினீர்.

**முதல்வர்:** கள்வனை பிடிப்பதுபோல, இயேசுவைப் பிடித்து வந்து தீர்ப்பிடுகின்றார்கள். பரிசேயரும் சதுசேயரும் பொறாமையினால் வெறித்தனமாக சூழ்ந்து நிற்க, யூத தலைமைச் சங்கத்தார் மற்றும் பிலாத்துவின் முன்னிலையில் வாயில்லாத செம்மறிபோல் இயேசு தனியாளாய் நிற்கிறார். பிலாத்துவிற்கு உண்மைநிலை தெரிந்திருந்தும், தனது மனைவியால் எச்சரிக்கப்பட்டும், நயவஞ்சகர்களுக்கு பயந்து, பதவி ஆசையில் இயேசுவுக்கு சிலுவை மரணத் தீர்ப்பளித்து, முதுகெலும்பில்லாத கோழையாக கை கழுவுகின்றார். உரோமையின் ஆட்சியைவிட இறையாட்சி உயர்ந்தது என்பதை ஒருவரும் உணரவில்லை. பரபா என்ற கொலையாளியை விடுதலை செய்துவிட்டு, பாவமறியா பரமன் இயேசுவைக் கொலைகளத்திற்கு அனுப்பும் அளவிற்கு இவர் செய்த குற்றம்தான் என்ன?

**செபம்:** அன்பு இயேசுவே! நீதிக்கு உறுதுணையாக நிற்காமலும் நன்மை தீமை தெரிந்திருந்தும், அதை கேட்கக்கூடிய தகுதியை இழந்ததற்காக எங்களை மன்னித்தருளும். ஆமென்.

**முதல்வர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும், ஆண்டவரே எங்கள்மேல் இரக்கமாயிரும்.

**அனைவரும்:** எங்கள்மேல் இரக்கமாயிரும், ஆண்டவரே இரக்கமாயிரும்.

**முதல்வர்:** இறந்த நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் முடிவில்லா இளைப்பாற்றியை அடைவார்களாக.

**அனைவரும்:** ஆமென்.

**பாடல்:** தாளாச் சிலுவை சுமக்க வைத்தார், உம்மை மாளாத் துயரால் துடிக்க வைத்தார். எனக்காக இறைவா எனக்காக! இடர்பட வந்தீர் எனக்காக!

## 2. இயேசுவின் தோல்மேல் பாரச்சிலுவையைச் சுமத்துகிறார்கள்

**முதல்வர்:** கனமான சிலுவையை இயேசுவின் தோள்மீது சுமத்துகிறார்கள். நம்ஒவ்வொருவரின்பாவமும்அவரின்தோள்மீது அமருகிறது.வேதனையின் மறு பெயர்தான் சிலுவை. விசாரணை என்ற பெயரில் அவர் அடைந்த அவமானமும், வேதனையும், எல்லாவற்றிக்கும் மேலாக, குற்றமொன்றும் இல்லாதிருந்தும் அவருக்குக் கிடைத்த கொலைத் தண்டனையும், ஏற்கெனவே உள்ளத்தை அழுத்திக் கொண்டிருக்க, இப்போது அவமானத்தின் சின்னமாகிய சிலுவை உடலையும் பதம்பார்க்கிறது. பாவப்பட்டச் சிலுவை, மகிமையின் சின்னமாக சிகரத்தைத் தொடுகிறது. காரணம் அப்பழுக்கில்லாத உண்மை அன்பினால் அது சுமக்கப்பட்டதால் புனிதமடைகிறது. நாம் சிலுவையைச் சுமத்துபவர்களா? சுமப்பவர்களா?

**செபம்:** அன்பு இயேசுவே! எம் சுயநலத்தின் சிலுவைகளை பிறர்மீது சுமத்தி, நான் மட்டும் மகிழ்ந்திருந்த நேரத்திற்காகவும், எம் குடும்பத்திலும், சமுதாயத்திலும் ஒருவர் மற்றவருடைய சுமைகளைப் புரிந்து கொண்டு, தோள்கொடுத்து உதவாமல் இருந்ததற்காகவும் எங்களை மன்னித்தருளும். ஆமென்.

## 3. இயேசு முதல் முறை கீழே விழுகிறார்

**முதல்வர்:** கால்கள் தடுமாறுகின்றன, கைகள் நடுங்குகின்றன, கண்கள் இருண்டுபோயின, தளர்ந்துபோன நிலையில் முதன்முறை தரையில் சரிகிறார். நம் பாவங்களுக்காக நொறுக்கப்பட்டு, கல்வாரி பலியால் நம்மை மீட்க வேண்டுமென்ற தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் இலட்சியத்தாகம் அது. அதை நிறைவேற்றும் வேகம் கொண்டு எழுந்து நடக்கிறார். விண்ணிலிருந்து வந்தவரை மண்ணில் தள்ளி மிதிக்கும் நம் பாவநிலை மாறுமா? இதை நம் வீழ்ச்சி என்று உணர்ந்திடும் விவேகமும், மீண்டும் எழுந்திடும் வேகமும் நம்மிடம் உண்டா?

**செபம்:** அன்பு இயேசுவே, வாழ்வின் துன்பங்களாலும், சோதனைகளாலும், நம்பிக்கையில் நடைதளர்ந்து வீழ்ந்த நாங்கள், விதியென்று சொல்லி சோம்பேறிகளாய் கிடந்ததற்காக எங்களை மன்னித்தருளும். ஆமென்.

## 4. இயேசு தன் தாயைச் சந்திக்கிறார்

**முதல்வர்:** ஒரு தாய் தன் சேயைக் காணக்கூடாத கோலத்தில் அன்னைமரி இயேசுவைச் சந்திக்கிறார். குற்றவாளிபோல் தன்மகன் தெருவில் கழுமரம் தூக்கிச் செல்வதைக் கண்டு தொண்டையை அடைக்கும் துக்கம், இதயமே வெடித்துவிடும் வேதனை அவருக்கு. ஆசையாய் நட்டுவளர்த்த இளநாற்று அவசரமாய் அறுவடைக்கு தயாராகி விட்டதே! என்று மரியாள் உள்ளம் குமுறுகிறார். கர்ப்பத்திலே காத்துக்கிடந்த கற்பனைகள் கண்முன்னே கருகுகிறது. ஆனாலும் இருவரின் சந்திப்பில் இறைவனின் திட்டம் இன்னும் திடப்படுகிறது. மீட்பிற்கான சிலுவையை இரு இதயங்களும் இணைந்தே சுமந்தன. துன்புறும் மகனுக்கு வெறும் ஆறுதல் கூற அன்னை வரவில்லை. அவரை உற்சாகப்படுத்தி உண்மையின் பாதையில் தொடர்ந்து செல்ல ஊக்கப்படுத்தவே அவர் வந்தார். அவர் கண்களில் கண்ணீர் தெறிக்கலாம், உள்ளத்தில் தெளிவான நிலை. இந்த உறுதி இன்று எத்தனை தாய்மாருக்கு உண்டு?

**செபம்:** அன்பு இயேசுவே! பெற்றத்தாய்க்கு பெருமையைத் தேடித்தருவதை விடுத்து அவமானம், அவமரியாதை தந்ததற்காகவும், உண்மை வழியில் நடக்க பிள்ளைகளை ஊக்கமூட்டாததற்காகவும் எங்களை மன்னித்தருளும்.

## 5. இயேசுவுக்கு சீமோன் உதவுகிறார்

**முதல்வர்:** "வாருங்கள் அவரோடு போவோம், அவரோடு மடிவோம்" என்றவர்களை கண்ணுக்கெட்டிய தூரம்வரை காணவில்லை. அன்பின் வெளிப்பாடான முத்தத்தை நயவஞ்சகத்தின் வெளிப்பாடாக்கி காட்டிக் கொடுத்தான் ஒருவன். "எல்லோரும் உம்மைவிட்டுப் போய்விட்டாலும், நான் உம்மைவிட்டு விலகமாட்டேன்" என்றவர் மும்முறை மறுதலித்துவிட்டார். எனவே, இயேசு தன் துன்பச்சுமையைத் தனியாளாய் சிலுவை சுமக்கிறார். இரும்பையும் இளகச் செய்யும் அவரின் பரிதாப நிலையைக் கண்டு கல்நெஞ்சம் கொண்ட கயவர்கள் பயப்படுகிறார்கள். எனவே அவர் வழியிலேயே இறந்திடாதிருக்க சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோனை, சிலுவை சுமக்க கட்டாயப்படுத்தினர். தெய்வீகத்திற்கே மனிதனின் உதவி தேவையாகிறது. சீமோனின் உதவிடும் கரங்கள் இயேசுவோடு இணைய சிலுவைப் பயணம் தொடர்கிறது. நமது கரங்கள் உதவிடும் கரங்களா, உமபத்திரக் கரங்களா?

## 6. வெரோணிக்காள் இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள்

**முதல்வர்:** இரத்த வியர்வையோடு புழுதியும் சேர்ந்து காய்ந்து போனதில் கோரமாக காட்சியளிக்கிறது இயேசுவின் முகம். கடுமையான களைப்பினால் கண்களும் மங்கிப்போயின. புனிதமுகம் காயங்களால் களையிழந்து காணப்படுவதைப் பொறுக்க முடியாமல், நிலவின்

கலங்கம் துடைக்க வரும் வெண்மேகம் போல், தடைகளைத் தாண்டி குருதிபடிந்த இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள் வெரோணிக்காள். அவள் இயேசுவின்மீதுக் கொண்டிருந்த அன்பு இத்தகைய துணிச்சலை அளித்தது. தனக்கு என்ன நடக்கும்? என்பது பற்றிக் கவலையில்லாமல் என்னால் இயேசுவுக்கு எவ்வித உதவி செய்யமுடியும்? என்று மட்டுமே சிந்தித்து செயல்படுகிறாள். தங்களில் பலமிருந்தும் பயத்தினால் பலவீனமாகி ஒதுங்கிச் செல்பவர்களுக்கும், பாதை மாறுகிறவர்களுக்கும் இவரின் வீரச்செயல் ஒரு பாடம். பிறரின் துயர் துடைக்கும் துணிவும், அன்பும் நம்மிடம் உண்டா?

**செபம்:** அன்பு இயேசுவே! அனைவரிலும் இறைச்சாயலைக் கண்டு அன்பு செய்வதை விடுத்து அவதூறாய் பேசி, பிறரின் நற்பெயருக்கு கறை உண்டாக்கிய எம் செயல்களை மன்னித்தருளும். ஆமென்.

## 7. இயேசு இரண்டாம் முறையாக தரையில் விழுகிறார்

**முதல்வர்:** கல்வாரி பாதையின் கற்கள் இயேசுவின் கால்களை இடருகின்றன. வசை பாடும் சொற்கள் அவரை வலுவிழக்கச் செய்கின்றன. வலியில் நாடி நரம்புகள் எல்லாம் ஆடி நடுங்குகிறது. உள்ளுக்குள் உயிர் ஒடுங்குகிறது. சிலுவை நடுங்கும் கரங்களிலிருந்து நழுவ, இரண்டாம் முறை தடுமாறி விழுகிறார். உடலின் வலுவின்மை உண்மைப் பாதையைத் தொடர தடைவிதிக்க முடியவில்லை. எனவே எடுத்த காரியம் முடிக்க, மறுபடியும் எழுந்து வீரத்தோடு நடக்கிறார். சோதனைகளுக்கும், தீமைகளுக்கும் எதிராக நாம் இலட்சியத்தில் நிலைத்து நின்றால், நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்று நமக்குப் பாடம் புகட்டுகிறார். வாழ்வின் சறுக்கல்களில் சறுக்கி விழுந்தாலும், உள்ளம் சோர்ந்து போகாமல் எழுந்து, இலட்சியங்களை நோக்கி நடைபயில நாம் தயாராக இருக்கின்றோமா?

**செபம்:** அன்பு இயேசுவே! நாங்கள் வீழ்ந்து கிடப்பதை உணராமலும், வீழ்ச்சியை ஏற்று மாற்றம் தேடாமலும், அதை மறைக்க விளக்கங்கள் கூறி வாழ்ந்ததற்காக எங்களை மன்னித்தருளும்.

## 8. இயேசு எருசலேம் மகளிரைச் சந்திக்கிறார்

**முதல்வர்:** ஒரு வாரத்துக்கு முன்பு "ஓசன்னா" என்று பாடி வரவேற்றவரை ஒரு கொலையாளியைப் போல கொடுமையாக இழுத்துச் செல்வதைக்கண்டு எருசலேம் நகரப் பெண்கள் உளம் நொந்து அழுகின்றனர். இம்மகளிரின் அழுகை இயேசுவின் வலியைக் குறைத்திருக்கலாம். ஆனால் மீட்பைப் பெற்றுக் கொள்ள நேரம் வரும்போது அழுகையா? ஏனென்றால் இச்சிலுவைப் பாடுகள். அவநம்பிக்கையிலும், பயத்திலும் சாவை நோக்கிச் செல்லும் சவ ஊர்வலம் அல்ல. மாறாக தமது ஆடுகள் வாழ்வு பெற, அதையும் நிறைவாய் பெற துன்பத்தை தாங்கி, துணிச்சலோடு இயேசு மேற்கொள்ளும் ஒரு புனிதப்பயணம்.

எனவே இவர்களின் கண்ணீரில் கலந்திருக்கும் மனிதாபிமானத்திற்கு இயேசு அங்கீகாரம் வழங்கி ஆறுதல் கூறினாலும், அவருக்காக அழவேண்டாம் என்கிறார். இயேசுவின் பாடுகளை தியானிக்கும் போதும், துன்புறும் மனிதரைக் காணும்போதும் நம்மில் வெளிப்படும் கண்ணீர் மனமாற்றத்தின் அடையாளமா? அல்லது ஏமாற்றுத்தனத்தின் வெளிவேடமா?

**செபம்:** அன்பு இயேசுவே! அழுவோரோடு அழாமல், பிறரின் துயர் கண்டு சந்தோஷப்பட்டும், சற்றும் பொறுத்தமில்லாத விமர்சனங்களை வழங்கியும், வாழ்ந்த நேரத்திற்காக எங்களை மன்னித்தருளும். ஆமென்.

## 9. இயேசு மூன்றாம் முறை தரையில் விழுகின்றார்

**முதல்வர்:** கல்வாரியை நெருங்கும் வேளையில் சிலுவையின் பளுவால் தோள்கள் துவண்டிட, களைப்பினால் கால்கள் நடக்க மறுத்து புரட்சி செய்ய, தாகத்தினால் நா வறண்டு இழுக்க இயேசு மூன்றாம் முறையாய், சிறகொடிந்த பறவையாய் கீழே விழுகிறார். மனிதர்கள் தவறிவிட்ட மாணிக்கத்தை, பூமித்தாய் பூரிப்போடு தாங்கிப்பிடித்து, கட்டியணைத்துக் கல்வாரிப்பலி நிறைவேற்ற வாழ்த்தி வழியனுப்புகிறாள். உண்மைக்குச் சான்றாகும் வரை ஊக்கம் குறைவதில்லை என்று, தொடர்ந்து கல்வாரி நோக்கி பயணிக்க, உறுதியோடு இயேசு எழுகிறார். இறைவார்த்தையாம் உண்மையைப் பற்றிக் கொண்டு வாழ்வதில், அதன்படி நடப்பதில் தொடக்கத்தில் இருக்கும் ஆர்வம் நாளாக நாளாக நம்மில் குறைகிறது. உண்மைக்காக வாழ்க்கையில் வரும் துன்பங்களும், இடர்பாடுகளும் நமது மனவுறுதியை சிதைக்கின்றன. அப்போதெல்லாம் நாம் முதுகெலும்பற்ற மனிதராய் முடங்கி, அடங்கி போகிறோமா? அல்லது முயன்று எழுகிறோமா?

**செபம்:** அன்பு இயேசுவே! இறையரசு பயணத்தில் இன்னல்கள் இடர்பாடுகளைச் சந்திக்கும்போது, சாட்சிய வாழ்விலிருந்து பின்வாங்கி, நம்பிக்கை இழந்து வாழ்ந்த நிலைக்காக எங்களை மன்னித்தருளும். ஆமென்.

## 10. இயேசுவின் ஆடைகள் களையப்படுகிறது

**முதல்வர்:** இயேசுவின் ஆடை, விலைமதிப்பில்லாத அவரது இரத்தத்தில் நனைந்து, காயங்களோடு ஒட்டிக் காய்ந்து போனது. கயவர்களின் வெறிச்செயலால், அவரின் சதையும் நார்நாராய்க் கிழிகிறது. ஒரு ஆடு வெட்டப்பட்ட பின்புதான் தோலுரிக்கப்படும். ஆனால் விலங்குக்கு காட்டப்படும் அன்புகூட நம் இயேசுவுக்கு காட்டப்படவில்லையே. அரக்கத்தனத்தின் உச்சக்கட்டம்தான் அவமானச் செயல்! பன்னிரண்டு ஆண்டுகள் இரத்தப்போக்கால் துன்புற்ற பெண்ணின் இரத்தப்போக்கை நிறுத்திய ஆடை, இயேசுவின் இரத்தமடைகளைத் திறக்கிறது. இன்று

உலகில் நடக்கும் அனைத்து உரிமை பறிப்புச் செயல்களும், ஆண்டவரின் ஆடைகளைக் களையும் அவமானச் செயல்களே. நம்மில் புறணி மற்றும் அவதூறு பேசும் ஒவ்வொருவரும் அடுத்தவரை நிர்வாணமாக்கி இழிவுப்படுத்துகின்றோம். நமது வாழ்க்கைச் சூழலில் அநீதியைக் கொண்டு நீதியை உரிக்கும்போது, துணிச்சலோடு நின்று ஆயனுக்குச் சான்று பகர்கின்றோமா?

**செபம்:** அன்பு இயேசுவே! பிறரை நிந்தித்து அவமானப்படுத்தி, அவர்களின் சுதந்திர ஆடையைக் களைந்து அடிமையாக்கி, தன்மானத்தை இழக்கச்செய்த செயல்களுக்காக எங்களை மன்னித்தருளும். ஆமென்.

## 11. இயேசு சிலுவையில் அறையப்படுகின்றார்

**முதல்வர்:** இரக்கமற்ற அரக்கர்கள் இயேசுவை சிலுவையில் கிடத்தி, கைகளிலும் கால்களிலும் ஆணி அடிக்கிறார்கள். ஓங்கி அடிக்கும் ஒவ்வொரு முறையும் அவரின் நாடி நரம்பெல்லாம் அறுந்து போகிறது. கொப்பளித்து வெளியேறும் குருதியில் உயிர் தத்தளித்துத் துடிக்கிறது. மீட்பின் கீதம் நாம் கேட்க இந்த மூங்கில் தன்னையே துளையிடத் தருகிறது.

முடக்குவாதமுற்றவனை நடக்க வைத்து "இரையாதே" என்று புயலை அடக்கிய இவர், ஆணிகளுக்கு நடுவே சிக்குண்டு அடக்கமாய் ஒடுங்கி கிடக்கிறார். இந்த அமைதியின் அரசருக்கு சிலுவைதான் சிம்மாசனம், முள்முடிதான் மணிமுடி, ஆணிகள்தான் செங்கோல். உண்மையின் அரசை சேர்ந்த அனைவருக்கும் அவைகளே அளவுகோல். கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்ற பழிவாங்கும் கலாச்சாரத்தைக் கடைபிடிக்கும் நமக்கு அமைதியை, மன்னிப்பை சிலுவையிலிருந்து போதிக்கின்றார். இன்றும் மனிதர் தம் சுயநலத்தால், பொறாமையினால், அதிகார ஆசையால் மனசாட்சியின்றி மற்றவர்களை ஆணிகளுக்கு இரையாக்கும்போது தட்டிக் கேட்கும் துணிவு நம்மிடம் உண்டா? கேலி செய்து சிரிக்கின்றோமா?

**செபம்:** அன்பு இயேசுவே! பணபலம், படைபலம் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து உண்மைப் பேசுவோரை அலட்சியப்படுத்தி பலியாக்கிய தருணங்களுக்காக எங்களை மன்னித்தருளும். ஆமென்.

## 12. இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்

**முதல்வர்:** கல்தூணில் கட்டியடித்து, முள்முடிச் சூட்டி பாரமான சிலுவையைச் சுமத்தி, ஆணிகளால் அறைந்து இயேசுவுக்கு அவர்கள் தந்த ஆறுமணிநேர வேதனை முடிவு பெறுகிறது. அன்று சிலுவையில் அறைவதில் இரு வழக்கங்கள் இருந்தன. நகருக்குள், "எங்கள் சமூகத்தவர்கள்" என்றும், நகருக்கு வெளியே "எங்கள் சமூகத்தவன் அல்ல" என்றும் அறைவார்கள். இதில் இயேசுவை இரண்டாம் வகை மனிதனாகவே நினைத்து செயல்பட்டனர். தரணியோர் அனைவரையும்

தாங்கிட வந்தவர் இயேசு. உயிர்பிரியும் நேரத்திலும், தன்னைச் சிலுவையில் அறைந்தவர்களை மன்னித்து அன்பையும், மன்னிப்பையும் போதிக்கிறார். "எல்லாம் நிறைவேறிற்று" என்று தந்தையிடம் தன்னை ஒப்படைத்து கீழ்ப்படிதலைக் கற்றுத்தருகிறார். கற்றுக் கொள்ள நாம் தயாரா?

**செபம்:** அன்பு இயேசுவே! மனம் பொருந்திய அலட்சியத்தால் உம்மை உதாசினப் படுத்தியதற்காகவும், அன்பு, மன்னிப்பு, பரிவு, கீழ்ப்படிதல் போன்ற உமது சிலுவையின் படிப்பினைகளை மறந்ததற்காகவும் எங்களை மன்னித்தருளும். ஆமென்.

## 13. இயேசுவின் உடல் தாயின் மடியில் கிடத்தப்படுகிறது

**முதல்வர்:** நாடியடங்கிய நாதன் இயேசு, சிலுவை அடியில், தாயின் மடியில் கிடத்தப்படுகிறார். மனித சாயலே இல்லாதவாறு சிதைக்கப்பட்ட தன் மகனை எலும்பும் தோலுமாக வாரி அணைக்கிறார், அன்னை மரியாள். தாய்மை இங்கே தவியாய்த் தவிக்கிறது. கல்லறைக்குச் செல்லும்முன் அவரின் சடலம் தாயின் கண்ணீரால் கழுவப்படுகிறது "கருவறை முதல் கல்லறை வரை" தன் மகனை நிழலாய்த் தொடர்ந்து வார்த்தையைக் கேட்டு வாழ்வாக்கியவர். இந்த அன்னை கானாவூர் திருமணத்தில் கடவுளின் திருவுளம் வெளிப்பட காரணமாயிருந்தவர், கல்வாரியிலும் கடவுளின் மாட்சி வெளிப்படும் நாளை எண்ணிக் காத்திருக்கிறார். இயேசு இறப்பைத் தழுவினாலும், ஆண்டவர் வாக்களித்தது நிறைவேறும் என்று இப்போது இன்னும் அதிகமாக நம்புகிறார். இறைவிருப்பத்திற்கு கீழ்ப்படிவதில் இந்த நம்பிக்கை நம்மிடம் உள்ளதா?

**செபம்:** அன்பு இயேசுவே! இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி நடவாமலும், இறை விருப்பத்திற்கு கீழ்ப்படியாமலும் நம்பிக்கையின் நாயகியாகிய அன்னை மரியாளை அலட்சியப்படுத்தியும் நாங்கள் கட்டிக்கொண்ட பாவங்களை மன்னித்தருளும். ஆமென்.

## 14. இயேசுவின் உடலை கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறது

**முதல்வர்:** இயேசுவின் சீடருள் ஒருவரான அரிமத்தியா ஊரைச் சார்ந்த யோசேப்பு, பிலாத்துவிடம் அனுமதிப் பெற்று இயேசுவின் உடலை எடுத்து யூத முறைப்படி நறுமண பொருட்களுடன் துணிகளால் சுற்றி புதிய கல்லறையில் அடக்கம் செய்தார். "மனுமகனுக்கோ தலை சாய்க்கவும் இடமில்லை" என்ற கூற்று இங்கு உண்மையாகிறது. முதலும் முடிவும் இல்லாத, அதாவது சாகாத்தன்மை கொண்ட இறைவன், மனித நிலைக்கு இறங்கி சாவை ஏற்றுக் கொண்டார் என்றால், இது நமக்காக அவர் ஏற்றக் கொண்ட சாவு. சாவுக்கு சமாதிக்கட்ட, சமாதிக்குள் முடங்கி, மூன்றாம் நாளில் முடிசூடப்போகும், இயேசுவின் மௌனத்தை இக்கல்லறை பிரதிபலிக்கிறது. உயிர்ப்பிலே நம்பிக்கை வைத்து நம் வாழ்வை நெறிப்படுத்த நாம் தயாரா?

**செபம்:** அன்பு இயேசுவே! எங்களில் நீதியானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ அவற்றைப் புதைத்து, போலியாய் வாழ்ந்த நேரங்களுக்காக எங்களை மன்னித்தருளும்.

**நமது திருத்தந்தையின் கருத்துக்களுக்காக செபிப்போம்**

**விண்ணுலகில் இருக்கின்ற, அருள் நிறைந்த மரியே, தந்தைக்கும்... ஆமென்.**

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## வாழ்வை மாற்றும் புனித வாரம்

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

அன்பார்ந்தவர்களே, கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் ஏப்ரல் 5ந்தேதி புனித வாரத்தில் அடியெடுத்து வைக்கின்றோம். ஓர் அன்பு புரட்சியாளராக வாழ்ந்த இயேசுவின் சிலுவைச் சாவையே இந்த ஏழு நாட்களைப் புனித வாரமாக மாற்றுகின்றது. பகைமையும் வெறுப்புணர்வும் ஆதிக்க வெறியும் நிறைந்த இவ்வுலகில், மக்கள் அனைவரையும் அன்பினால் ஒன்றிணைக்க வந்தவர் இறைமகன் இயேசு. உலக வரலாற்றை இரண்டாகப் பிரித்த அவரது வாழ்வின் உச்ச நிகழ்வுகளைச் சிந்தித்து, நமது வாழ்வில் மாற்றம் காண இந்தப் புனித வாரத்தில் திருஅவை நமக்கு அழைப்பு விடுக்கிறது. புனிதம் என்பது என்ன? மனித குலம் புனிதம் இழந்தது ஏன்? அது மீண்டும் இயேசுவின் வழியாகப் புனிதம் அடைவது எப்படி? என்ற சில கேள்விகளுக்கானத் தீர்வு புனித வாரத்தில் நமக்குக் கிடைக்கின்றது. உயிர்ப்புப் பெருவிழாவுக்கு முன்பு, திருஅவை நாற்பது நாட்களைத் தவக்காலமாக அனுசரிக்கிறது. சாம்பல் புதனன்று தொடங்கும் தவக்காலம், புனித வாரத்தில் அதன் உச்சத்தை அடைகின்றது. தவக்காலம் முழுவதுமே கிறிஸ்துவின் பாடுகளை நாம் தியானித்தாலும், அதன் அடிப்படை நிகழ்வுகள் புனித வாரத்திலேயே அரங்கேறின.

கடவுள் படைத்த நன்மைத் தனத்தில் நிலைத்து வாழ்வதே புனிதமாக இருக்க முடியும். நன்மைத் தனத்தின் அடிப்படையை கடவுளின் உருவமாக நம்மிடையே தோன்றிய இயேசு நமக்குக் கற்பித்திருக்கிறார். "நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்" (யோவா 13:34) என்ற இயேசுவின் கட்டளையில் அந்த அடிப்படையைக் காண்கிறோம். "உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்" (மத் 5:48) என்பதே புனிதத்தின் விளக்கம். கடவுளைப் போன்று நிறைவுள்ளவர்களாய் வாழ்வது மற்றவரை அன்பு செய்வதில் தொடங்குகின்றது. "பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும்

அவர்களுக்குச் செய்யுங்கள்” என்று இயேசு கூறினார். தம்மைப் போல் பிறரையும் நேசிக்கின்ற இத்தகைய மேலான அன்பிலிருந்தே புனிதம் ஊற்றெடுக்கிறது. எங்கே அன்புக்கு இடமில்லையோ, பகைமை வேரூன்றுகிறதோ, அங்கு மனிதர்கள் புனிதத்தை இழக்கின்றார்கள்.

இறைமகன் இயேசு அக்கால யூத சமூகத்தில் நிலவிய அடக்குமுறைகளையும், அநீதிகளையும் எதிர்த்துப் போராடினார். ஆதிக்க வர்க்கத்தினரால் ஒடுக்கப்பட்டு, உரிமையிழந்து வாழ்ந்த அப்பாவி மக்களுக்காகக் குரல் கொடுத்தார். சமயத்தின் பெயரால் நிகழ்ந்த அத்துமீறல்களையும் அநியாயங்களையும் கண்டித்தார். இறையாட்சியை மக்களிடையே நிறுவி, அதன் இயல்புகளை உவமைகள் வழியாக விளக்கிக் கூறினார். இயேசு கிறிஸ்து மக்கள்மீது கொண்ட அன்பின் ஆழமே அவரது உயிரை மக்களின் நலனுக்காக பலியாக்கத் தூண்டியது. புனித வாரத்தின் முதல் நாளான குருத்து ஞாயிறு என்பது ஒரு புரட்சி ஞாயிறு. கலிலேயப் பகுதியில் பாமர மக்களுடன் உலவி வந்த சாதாரண போதகர், யூத சமயத் தலைவர்களுக்கு எதிராகத் துணிந்து புரட்சிச் செய்த நாள் அது. எருசலேம் கோவிலில் நுழைந்து, "என் தந்தையின் இல்லத்தைக் கள்வர் குகையாக்குகிறீர்கள்” (மத் 21:13) என வெகுண்டெழுந்த வேளையில் இயேசுவின் சாவுக்கு அடித்தளம் இடப்பட்டது.

பாமரப் புரட்சிகள் எப்போதும் ஆதிக்க வர்க்கத்தினரால் அடக்கி ஒடுக்கப்படுகின்றன. இயேசுவின் புரட்சியும் இதற்கு விதிவிலக்கல்ல. சிலுவை மரணத்தின் வழியாக அவருக்கு முடிவுகட்ட யூதாசின் உதவியை நாடியது யூத தலைமைச் சங்கம். நிகழவிருந்த அனைத்தும் இயேசுவுக்கும் தெரிந்திருந்தது. இயேசு எந்த பாமரர்களின் நலனுக்காக ஆதிக்க வர்க்கத்தை எதிர்க்க முனைந்தாரோ, அவர்களில் ஒருவனாகிய யூதாசே அவரைக் காட்டிக்கொடுத்தான். ஆனால் அவனையும் அன்பு செய்த இயேசு, "தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விடச் சிறந்த அன்பு யாரிடமும் இல்லை” (யோவா 15:13) என்று கூறி இறக்கத் தயாராகிறார். மனிதர்களாகிய நாம் அன்பு செய்கின்ற ஒருவருக்காக எதையும் செய்யத் துணிகின்றோம். அவ்வாறே, நம்மீது கொண்ட அன்பினால் இயேசு தமது இறைத்தன்மையை வலிந்து பற்றிக்கொள்ளாமல், தம்மையே தாழ்த்தி மனித உடலேற்று நமக்காக சிலுவைச் சாவை ஏற்றார். "இயேசு கிறிஸ்து ஒரே ஒருமுறை தம் உடலைப் பலியாகச் செலுத்தியதன் மூலம் நாம் புனிதத்தை அடைந்திருக்கிறோம்” (எபி 10:10).

கிறிஸ்தவ வாழ்வு என்பது நீதிக்காக குரலெழுப்பவும், பாவத்தை விலக்கி புனிதத்தில் வளரவும், இயேசுவின் பண்புகளை நமது வாழ்வில் பிரதிபலிக்கவும் புனித வார வழிபாடுகள் நமக்குக் கற்பிக்கின்றன. ஆகவே, வாழ்வில் வருகின்ற துன்பங்களையும் போராட்டங்களையும்

பொறுமையுடன் ஏற்று, இயேசுவின் அன்புக்கு பதிலன்பு செலுத்த புனித வாரத்தில் நாம் துணிவு பெறுகின்றோம். கிறிஸ்துவின் பாதையில் பயணம் செய்து புனிதமாக வாழ்வதற்கான மாற்றத்தை புனித வாரம் வழங்குகிறது. இயேசுவின் மீட்பு மறைபொருளோடு ஒன்றித்து நமது வாழ்வைச் சீராக்க இந்த நாட்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. நாம் பாவத்திற்கு இறந்து, புனிதத்தில் உயிர்த்தெழுவதற்கான மனமாற்றத்தைப் புனித வாரத்தில் பெற்றுக்கொள்கிறோம். கிறிஸ்துவின் சிலுவையோடு நமது பாவங்களை அறைந்துவிட்டு, அவரது உயிர்ப்பின் மாட்சியால் நம்மைப் புனிதத்தில் உயிர்ப்பிக்க இந்தப் புனித வாரம் உதவட்டும்.

## உயிர்ப்பின் மக்களாய் வாழ்வோம்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

"அதற்கு முன்பு யாரையும் அதில் அடக்கம் செய்யவில்லை" (லூக் 23: 53). இயேசுவின் தொடக்கம் ஒரு கன்னியின் கருவறையில், அவரது அடக்கம் ஒரு புதுக் கல்லறையில். இதுவரை எந்தவொரு மனிதனும் துயில் கொள்ளாத புதிய கல்லறையில் இயேசு மூன்று நாட்கள் துயில் கொண்டார். இயேசு பாடுகள் படும்வரை மகிமைப்படுத்தப்படவில்லை. தந்தை தனக்கிட்ட பணியைச் செய்து முடிக்கும்வரை இயேசுவின் உடல் எச்சினாலும், வசைச்சொற்களாலும் மிகுந்த அவமானத்திற்குட்பட்டது. அவரது உடல் புழுதியில் புரட்டி எடுக்கப்பட்டது. இரத்தக் காயங்களால் உருக்குலைக்கப்பட்டது. மனிதரால் இகழப்பட்டு துன்புறும் மனிதராய் துயரத்தில் ஆழ்ந்தவராய், அருவருக்கத்தக்கவராய் காணப்பட்டார். உடலளவில் இயேசுபட்ட அவமானங்கள் எல்லாம் அவர்தம் மீட்புப் பணியை முடிக்கும் வரையில்தான் இறைவன் அனுமதித்தார், மரித்தார். ஆம் இயேசுவின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. மூன்று நாட்கள் மட்டுமே அந்த ஒளி கல்லறைக்குள் ஒடுங்கியிருந்தது. இயேசு கடவுள் என்பதால் கல்லறை அவரை அடக்க முடியவில்லை.

மரணம் அவர்மேல் அதிகாரம் காட்ட முடியவில்லை. அதோ அந்த ஒளி இருளைக் கிழித்துக்கொண்டு கிளர்ந்தெழுந்தது, உயிர்த்தெழுந்தார். அங்கே பெரிய வெள்ளிக்கிழமையின் பெரிய அதிர்ச்சியான நிகழ்வுகள் அவரின் சீடர்களை நிலைக் குலையச் செய்திருந்தன. அவர்களைத் துயரத்தில் ஆழ்த்தியிருந்தன. அவருடைய சீடர்களுக்கோ ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பைப் பற்றிய நினைவே வரவில்லை என்பது நிதர்சனமான உண்மை. கல்லானது நகர்த்தப்பட்டு கல்லறை வெறுமையாயிருப்பது கண்டு, ஆண்டவர் உயிர்த்துவிட்டார் என எண்ணாது அவரது உடலை யாரோ எடுத்திருப்பர் என்றே எண்ணினர். இந்தச் செயலை கண்டுக்கொள்ளாத இயேசு அவர்களுக்குக் காட்சி தருகிறார் மரிய மகதலாவுக்கு, தோமாவுக்கு, பேதுருவுக்கு.

இயேசுவின் உயிர்ப்புதான் நம் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு மூலைக்கல்லாக உள்ளது. "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லையென்றால் நாங்கள் பறைச்சாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" (1கொரி 15:14) என்று பவுலடியார் கூறுகிறார். இந்த நம்பிக்கைத் தான் திருஅவையின் உயிர்நாடி. இன்றுவரை நம்மை வாழ்வித்துக் கொண்டிருப்பது இந்த நம்பிக்கையே. ஆம் கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளமும் இதுவே.திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால் கிறிஸ்தவர்களை "உயிர்ப்பின் மக்கள்" என்கிறார். ஆம் உயிர்ப்பு நம்மில் உயிர்பெறவேண்டும். உயிர்த்த கடவுளின் அடையாளமாய் நம் வாழ்வு அமைய வேண்டும். நற்செயல்கள், நற்பண்புகள் உலகிற்கு இயேசுவை அடையாளம் காட்டும் தழும்புகளாக வேண்டும். கம்யூனிச தத்துவ மேதை லெனின் ஒருமுறை தன் தோழர்களுடன் பேசிக்கொண்டிருந்தபொழுது எனக்கு என்னுடைய தத்துவத்தை ஏற்றுக்கொண்டவர்கள் வேண்டாம், என்னுடைய தத்துவத்தை வாழ்ந்துக் காட்டக் கூடிய தோழர்கள்தான் வேண்டும் என்றார்.

இயேசுவின் உயிர்ப்பும் இதைத்தான் சுட்டிக்காட்டுகிறது. இறந்தபின் வாழ்வு உண்டு என்ற நம்பிக்கையை மட்டுமல்ல, இப்பொழுதே, இவ்வுலகிலேயே உயிர்ப்பின் மக்களாய் வாழ முயன்றிடுங்கள், இதற்கு நம் ஆதி திருஅவை காட்டிய வழியையும் வாழ்வினையும் அடையாளமாக்கிடுவோம். தொடக்கக் கால கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் பாஸ்காவைக் கொண்டாடுவதைக் காட்டிலும் அதை வாழ்ந்தும் காட்டினார்கள். அவர்கள் அனைவரும் வேறுபாடுகளைக் களைந்து, விருப்பு வெறுப்புகளைக் கடந்து ஒன்றாயிருந்தார்கள். எல்லாம் அனைவருக்கும் சொந்தம், நான், எனது என்ற சுயநல விட்டத்தைக் கடந்தவர்களாய் இருந்தனர். எனவே ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாய் சொத்துக்களை நிலபுலன்களை உடைமைகளைப் பொதுவாக்கி அனைவருக்கும் சொந்தம் என்றனர். அவரவரது தேவைகளைப் பூர்த்திச் செய்தனர். ஒரே மனம், நட்புறவு, கூடி வாழ்தல், அப்பம் பிட்டு ஆண்டவனைக் காணுதல் என விண்ணக வாழ்வை மண்ணில் வாழமுடியும் என்று வாழ்ந்துக் காட்டினர். நாமும் அவர்களைப் பின்பற்றுவதில் என்ன சிரமம்.

மண்ணின் உருக்கொண்ட நம் உயிர்ப்பு இறை இயேசுவின் வெளிப்பாடு. உயிர்ப்பு என்பது இறந்தபின்பு கிடைக்கும் வெற்றிப் பரிசு அன்று, வாழும் மனிதர்களாகிய நம் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் நித்தமும் நிகழும் நிம்மதியின் தோற்றமே. ஆம், ஒவ்வொரு பிறப்புக்கும் வாழ்வுண்டு. ஒவ்வொரு வாழ்வுக்கும் இறப்புண்டு. ஒவ்வொரு இறப்புக்கும் உயிர்ப்புண்டு. ஆம் அந்த உயிர்ப்பு நாம் வாழும் வாழ்வின் தோற்றமே, தோற்றங்களை உண்மையாக்குவோம், வாழ்வின் செயல்களாக்குவோம். ஆன்மீகத்தின் உயிர்ப்பை நம் அர்ப்பணத்தின் வெளிப்பாடாக்குவோம். இரக்கத்தின் உயிர்ப்பினை நம் இதயத்தின் துடிப்பாக்குவோம். ஈகையின்

உயிர்ப்பை ஏழையின் கண்ணீரைத் துடைக்கப் பயன்படுத்துவோம். உறவின் உயிர்ப்பை நம் உள்ள உணர்வாக பரிமளிப்போம். எரியும் விளக்கின் உயிர்ப்பு அதன் வெளிச்சத்தில் வெளிப்படும். அதுபோன்று நம் மனிதத்தின் உயிர்ப்பினைப் புனித வாழ்வால் வெளிப்படுத்துவோம். அன்பிழந்து தவிக்கும் முதியோர்களுக்கு ஆறுதல் தரும் உயிர்ப்பின் கரமாகுவோம். பசியால் வாடும் ஏழையின் பசிக்கு உணவளித்து அவர்களின் உயிர்ப்பாவோம். கல்வியிழந்து தவிக்கும் குழந்தைகளின் அறிவுக் கண்களைத் திறந்து அவர்களின் உயிர்ப்பாவோம். சுமையோடு வாடும் உள்ளங்களுக்கு உயிர்ப்பின் சுமைதாங்கிகளாவோம்.

நோயோடும், உடல் வாதையோடும் வாழ்வோருக்கு சுகமளிக்கும் உயிர்ப்பின் மருத்துவராவோம், வாழ்விழந்து, வசதியின்றி, பொருளின்றி கலங்கிடுவோருக்கு இதோ உதவ நானிருக்கிறேன் என்று உதவிடும் உயிர்ப்பாவோம். நான் ஏன் வாழ்கிறேன், என் வாழ்வே இருள் சூழ்ந்தது என்றிடும் எளியோர்க்கு, உயிர்ப்பின் வாழ்வளிக்கும் வழிகாட்டிகளாவோம். அனைத்துக்கும் மேலாய் தவம் எனும் உயிரூட்டச் செயல்களால் பிறர் வாழ தன்னை ஒடுக்கும் செயல்களால் நான் எனும் அகந்தையை மறந்து பிறரை வாழவைக்கும் பண்புடையவர்களாய் வாழ்வோம். உயிர்த்தெழுதலைக் காணாமலே அதை நம்புகிறோம், அதை வாழ்கிறோம், அதை வழிபடுகிறோம் (1பேதுரு 1:8). ஆம், இயேசுவின் உயிர்ப்பில் நாம் உயிர் பெற்றவர்களாய் புதிய மனிதர்களாய், வாழ்வின் மாற்றுப் பாதையாய் வாழ்விலும், வார்த்தையிலும், செயலிலும் உயிர்ப்பின் மக்களாய் வாழ்வோம்.

## புனித மாற்கு - வாழ்வு தரும் பாடம்

திருமதி. ராணிவில்சன்

கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தி எனத் தொடங்குவதிலிருந்து இவர் யார் என நாம் தெரிந்துக் கொள்ளலாம். "கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற திருக்குறளுக்கேற்ப வாழ்ந்தவர் இவர். இறை இயேசுவின் வாழ்வு, பணி அனைத்திலும் இவரின் பங்கேற்பு உள்ளது. இவரின் நற்செய்திதான் முதலில் எழுதப்பட்டது என்பது அறிஞர்கள் கருத்து. காரணம் உரோமையர்களால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுதல், புனித பேதுரு பவுல் போன்றோர் கொல்லப்பட்டதால் இறை இயேசுவின் வல்ல செயல்கள், உவமைகள், கூற்றுகள், மனம் மாறுதல், இறையாட்சியில் உரிமை பெறல், யூத கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, பிற இன கிறிஸ்தவர்களுக்கும் இறை மாட்சி போய்ச் சேரவேண்டிய கட்டாயம் உளது என்பனவற்றை உணர்ந்து அனைத்தையும் தொகுத்து எழுத்து வடிவம் வழங்கியுள்ளார். இவரது முழுப் பெயர் யோவான் மாற்கு, புனித பேதுரு, புனித பவுல் இவர்களது திருநூலில் (திப. 5:3, கொலோ. 4:10, 2திமொ. 4:11, பிலமோன் 2: 4) குறிப்பிடுபவர் இவர் ஒருவரே. இவர் மட்டுமல்ல இவரது குடும்பமும் அதாவது இவரது தாயும் தொடக்க கால கிறிஸ்தவர்களுக்கும் புனித பேதுருவிற்கும் மிக உதவியாக இருந்து

வந்துள்ளனர். தங்களது இல்லத்திலேயே வந்து தங்கியிருக்க, இன்னும் தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுத்துள்ளனர். சேவை செய்வது எளிது. ஆனால் துன்புறும் காலத்தில் அச்சத்தின் வேளையில் இவற்றைத் தியாக மனப்பான்மையோடு செய்வது என்பது மிகக் கடினமான ஒன்று.

உரோமை நகரில் புனித பவுல் சிறைப்பட்டிருந்தபோது மாற்கு உதவியாக வருகிறார். பம்பலியா நாட்டில் பொகா எனும் இடத்தில் இவர்கள் தங்கியிருந்தபோது இவர் பிரிந்து சென்றதைக் கோழைத் தனத்தால் என்று எண்ணினர். புனித பவுல் இவர் உதவியாக வந்ததைப் பார்த்ததும் உறுதியைக் கண்டதும் புனித திமோத்தேயுவுக்கு இவ்வாறு எழுதுகிறார். மாற்கு எனக்கு உதவியாக இருப்பார் ஆகவே அவரை அழைத்து வா எனப் பணிக்கிறார். புனித பேதுருவோடு நெருங்கிய தோழமையுடன் இருந்து பயணித்தார் என்பது குறிப்பிடத்தக்கது என வரலாற்று ஆசிரியர் யுசிபிசேஸ் என்பவர் குறிப்பிடுகிறார். அதுமட்டுமல்ல அலெக்சாண்டிரியா நகர் கிளமெண்ட், இரனேயுஸ், பாப்பியாஸ் ஆகியோர் இவரைப் பேதுருவின் விளக்கவுரையாளர் எனக் குறிப்பிடுகின்றனர். இதற்குக் காரணம், சிலரின் கருத்து இவர் இறையேசுவைச் சந்திக்காதவர் என்றாலும், அவர் கைதியாக கொண்டு போகும்போது இவர்பின் தொடர்ந்தார் என்பதை ஏற்றுக்கொள்கின்றனர் (மாற்கு 14:51). புனித பேதுருவின் முதல் திருநூலில் “என் மைந்தன் மாற்கு” என குறிப்பிடுவதைப் பார்த்து, மக்கள் கூட்டம் ஆயனில்லா ஆடுகளைப்போல் பரிதவிக்கும் நிலை, பெருந்தொகை கூட்டம் உணவில்லா நிலை, திருத்தூதர்கள் தங்கள் இயலாமையை வெளிப்படுத்தி மக்களைத் திருப்பி அனுப்பச் சொல்ல, ஆனால் இரக்கத்தோடு இறைஇயேசு இயலாமைக்கு மத்தியிலும் இருப்பதைப் பகிர வைத்த கருத்தை மையப்படுத்தும்போது இறைவனின் வல்லமையைப் பார்க்கின்றோம். இவரின் எழுத்து இயேசுவின் பரிவு இரக்கத்தையே வாழ்வாக்க இயலும் என்பதனை நிரூபிக்கின்றது.

**இரக்கம் என்றால் என்ன என்பதனை புனித தாமஸ் அக்குவினாஸ் கூறுகிறார்:** நம்மைச் சுற்றி காணப்படும் பாவத்தைக் கண்டும் கண்மூடித்தனமாய் சகித்திருப்பதும், அவற்றை நியாயப்படுத்துவதும், உரிமையாகக் கொண்டிருப்பதும் இரக்கம் அல்ல. மாறாக பாவத்தை வெறுத்து, புறக்கணித்து, பாவியை அன்பு செய்து, பரிவிரக்கம் கொள்வதே உண்மையான இரக்கம் எனத் தெளிவாகக் கூறுகிறார். அதுமட்டுமல்ல, பாவக்குழியில் வீழ்ந்து கிடக்காமல் பாவியை, உண்மையை நோக்கி வழிநடத்துவதும், மனம் மாறியவர் கடவுளை அன்பு செய்து, கடவுளுக்குமுன் நேர்மையான வாழ்வு வாழ்வது உண்மையான இரக்கத்தைப் பெற்றுள்ளோம், என்ற மாபெரும் உண்மையை வெளிக்கொணர்வோம்.

## திருஅவைச் செய்திகள்

திரு. சாண்டோ

### மருத்துவமனையிலிருந்து சாந்தா மார்த்தா இல்லம் திரும்பினார் திருத்தந்தை

ஜெமெல்லி மருத்துவமனையின் வெளிப்புறத்தில் கூடியிருந்த மக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து, அங்கிருந்து புறப்பட்டு சாந்தா மார்த்தா இல்லம் திரும்பினார் திருத்தந்தை பிரான்சிஸ். மார்ச் 23, ஞாயிற்றுக்கிழமை ஜெமெல்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு ஏறக்குறைய 38 நாள்களுக்குப்பின் இல்லம் திரும்பிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மருத்துவமனை வளாகத்தில் கூடியிருந்த அனைவரையும் சந்தித்து விடைபெற்றார். ஏறக்குறைய 3000 மக்கள் மருத்துவமனை வளாகத்தில் கூடியிருக்க 78 வயதுடைய கர்மேலா மன்குசோ என்ற, இத்தாலியின் கலாபிரியாவைச் சார்ந்த பெண்மணி ஒருவர் கையில் மஞ்சள்நிற மலர்க்கொத்துடன் கையசைத்தவாறே திருத்தந்தையை வாழ்த்தினார். இதனைக் கண்ட திருத்தந்தை அவர்கள் அப்பெண்மணியைச் சுட்டிக்காட்டி வாழ்த்தினார். மார்ச் 23, ஞாயிற்றுக்கிழமை உரோமையில் உள்ள ஜெமெல்லி மருத்துவமனை வளாகத்தில் நண்பகல் 12 மணியளவில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மருத்துவமனையின் வெளிப்புறமான பால்கனி மாடிமுகப்பில் இருந்தவாறே திருப்பயணிகளை வாழ்த்தினார். "அனைவருக்கும் நன்றி" என்று மெலிதான குரலில் கூறிய திருத்தந்தை அவர்கள், கூடியிருந்த மக்கள் அனைவரையும் பார்த்து கையசைத்து வாழ்த்தினார். மூச்சுக்குழாய் அழற்சி நோய்க்கென தொடர் சிகிச்சைப் பெற்று வந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறே மருத்துவமனை வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு கரம் உயர்த்தி ஆசீர் வழங்கினார்.

### வணக்கத்திற்குரியவராக உயர்த்தப்பட்ட சால்வோ தக்குயிஸ்தோ

இயேசுவைப்போல பிறருக்காகத் தனது உயிரைத் தியாகம் செய்தவர் வணக்கத்திற்குரிய சால்வோ தக்குயிஸ்தோ என்றும், "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்" (லூக்கா 23:42) என்ற இறைவார்த்தைகளைத் தனது உள்ளத்தில் கேட்டு, உயிரைக் கையளித்த அவர், பேரின்ப வீட்டில் இயேசுவோடு இருப்பார் என்றும் எடுத்துரைத்தார் கர்தினால் மர்செல்லோ செமராரோ. மார்ச் 22, சனிக்கிழமை நேபிள்சில் உள்ள தூய கிளாரா பேராலயத்தில் இறைஊழியர் Salvo D'Acquisto அவர்கள் (புனிதர் பட்ட நிலையின் இரண்டாம் நிலை) வணக்கத்திற்குரியவர் நிலைக்கு உயர்த்தப்பட்டு திருப்பலிக்குத் தலைமையேற்று மறையுரையாற்றியபோது இவ்வாறு கூறினார். புனிதர்பட்ட நிலைகளுக்குரிய திருப்பீடத் துறையின் தலைவர் கர்தினால் மர்செல்லோ செமராரோ. சால்வோ தக்குயிஸ்தோ அவர்களின் மூன்று இளமைத்துவம் என்ற தலைப்பின்கீழ் தனது

கருத்துக்களை எடுத்துரைத்த கர்தினால் செமராரோ அவர்கள், தனது குடும்பத்தில், இராணுவத்தில், மக்களுக்கானப் பணியில், மூன்றாவதாக அவரது வீரத்துவம் நிறைந்த மரணத்தில், இறைவனின் திருவுளத்தில் நம்பிக்கைக் கொண்டு வாழ்ந்தவர் என்று சுட்டிக்காட்டி அவர்போல வாழ்ந்திடவும் வலியுறுத்தினார். நல்ல கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த வணக்கத்திற்குரியவரான சால்வோ தக்குயிஸ்தோ அவர்கள், வாழ்க்கையின் கடமைகளை எவ்வாறு கையாள்வது என்பதைத் தனது குடும்பத்தில் இருந்து கற்றுக்கொண்டார் என்றும், தனது பத்தொன்பதாவது வயது முதல் இறுதி நாள் வரை தந்தைக்குரிய அன்போடு, மனித சமூகத்திற்கான பணியில் இராணுவத்தில் வாழ்ந்து, உயிர் துறந்தவர் என்றும் எடுத்துரைத்தார் கர்தினால் செமராரோ.

## 4. இறையழைத்தலுக்காக இறைவேண்டல் செய்வோம் - திருத்தந்தை

இறையழைத்தல் என்பது கடவுள் நம் இதயத்தில் விதைக்கும் ஒரு விலைமதிப்பற்ற கொடை என்றும், நம்மையே இழந்து அன்பு மற்றும் சேவையின் பயணத்தைத் தொடங்குவதற்கான ஓர் அழைப்பு என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். வருகிற மே மாதம் 11-ஆம் தேதி சிறப்பிக்கப்படவிருக்கும் 62-வது உலக இறையழைத்தல் நாளுக்கென, மார்ச் 19, புதன்கிழமை அன்று, வெளியிட்ட செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறையழைத்தலுக்காக இறைவேண்டல் செய்யவும் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார். திருஅவையில் உள்ள ஒவ்வோர் இறையழைப்பும், அது பொதுநிலையினராக இருந்தாலும், திருநிலைப்படுத்தப்பட்ட அருள்பணியாளராக இருந்தாலும், துறவு வாழ்வுக்கு அர்ப்பணிக்கப்பட்டவராக இருந்தாலும், கடவுள் இந்த உலகத்திற்கும், ஒவ்வொரு பிள்ளைக்கும் வைத்திருக்கும் நம்பிக்கையின் அடையாளமாக இருக்கின்றது என்றும் எடுத்துக் காட்டியுள்ளார்.

தாங்கள் பெற்றுள்ள இறையழைதல் கடவுளிடமிருந்து கிடைத்த விலைமதிப்பற்ற ஒரு கொடையாகவும், நம்பிக்கை, மகிழ்ச்சி மற்றும் நிறைவிற்குவழிவகுக்கும்ஒன்றாகவும்கருதுமாறுஇளையோருக்குஅழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை. பாதுகாப்பின்மை, தனித்தன்மைக் குறித்த நெருக்கடிகள் மற்றும் சமூகப் பிரச்சனைகள் உள்ளிட்ட இன்றைய இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்களை ஒப்புக்கொண்டுள்ள அதேவேளையில், இந்தப் போராட்டங்கள் இருந்த போதிலும் அவர்களுடன் கடவுள் இருக்கிறார் என்றும், அவர்களை அன்பு கூறுகிறார் என்றும் அவர்களுக்கு உறுதியளித்துள்ளார் திருத்தந்தை. இளைஞர்கள் தங்கள் இறையழைத்தலை செபம், அமைதி மற்றும் நற்சிந்தனைகள் வழியாகத் தெளிந்து தேர்ந்து, கடவுள் தங்களை வழிநடத்துகிறார் என்பதை நம்ப வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை.

## சுடர் வாசகர் போட்டி - 120

1. 1458, அக்டோபர் 3ம் நாள், க்ராக்கோ நகரில்
2. புனித பெர்ப்பெத்துவா, பெலிசித்தா
3. நல்லறிவும், நல் இதயமும் பெற்று நம் இறைச்சாயலை புதுப்பித்துக் கொள்வோம்
4. மீட்புப் பெறுவர்
5. புனித யோசேப்பு
6. உயர்ந்த இலட்சியங்களை அடைய விரும்பிய
7. கடவுளின் ஒட்டுமொத்த மீட்புத்திட்டமும், மரியாவின் ஒத்துழைப்பைச் சார்ந்திருந்தது. இந்த ஒத்துழைப்புதான் மனித குலத்திற்கான மீட்பின் கதவு திறக்கப்படுவதற்கு காரணமாயிருந்தது.
8. நம்பிக்கை, துணிவு மற்றும் எதிர்நோக்கை
9. பேராயர் ரீனோ பிசிகெல்லா
10. கி.பி. 710, மார்ச் 27 அன்று
11. ஆங்கிலோ காக்சன் பிரிவினருக்கும் மிரிசியன்ஸ் பிரிவினருக்கும்
12. மங்களகரமான தருணமாக
13. நிலைவாழ்வு தரும் இறையாட்சியாக நிலைப்பெற்றது
14. இயேசுவை அறியாதவர்கள்
15. நோன்பிருந்து, செபம் செய்து, பிறருக்கு உதவி செய்து வாழ திருஅவை நம்மை அழைக்கின்றது.

### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Sr. Fatima FMA, Vellore

Sr. Ferrera, Salem

Mr. Maria Santhoshraj, Namkkal

## சுடர் வாசகர் போட்டி 121

1. புனித பவுல் தனக்கு உதவியாக இருக்க யாரை அழைத்து வரும்படி திமோத்தேயுவுக்கு கூறுகிறார்?
2. நம்மை "உயிர்ப்பின் மக்கள்" என்று கூறிய திருத்தந்தை யார்?
3. புனித ஐந்தாம் பயஸ் எத்தனை ஆண்டுகள் இறையியல், தத்துவ இயல் பேராசிரியராக பணிபுரிந்தார்?
4. "அடைப்பட்டு வாழாமல் பொதுப்பணி செய்ய புறப்படு" இது யாருக்குக் கிடைத்த அழைப்பு?
5. நாம் எப்படி துயவராக்கப்பட்டிருக்கிறோம் என்று புனித பவுல் கூறுகிறார்?
6. தனது திருமணத்திற்கு பிறகு ஒரு துறவற சபையை உருவாக்கிய புனிதர் யார்?
7. பிறந்தபோது ஒருகண் பார்வையின்றி பிறந்த புனிதர் யார்?
8. உயிர்த்த கிறிஸ்தவர்களின் மகிழ்ச்சி எதைப் பிரதிபலிக்க வேண்டும்?
9. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உடல்நலமின்றி அனுமதிக்கப்பட்ட மருத்துவமனை எது?
10. எரியும் விளக்கின் உயிர்ப்பு எதில் வெளிப்படும் என்று ஆசிரியர் கூறுகிறார்?
11. துருக்கியர்கள் எதற்காக கிறிஸ்தவர்கள்மீது போர் தொடுத்தனர்?
12. கருத்தரிக்க இயலாதவரின் பாதுகாவலர் யார்?
13. "சமாதானப் புறா" என்று அழைக்கப்பட்ட புனிதர் யார்?
14. மான்போர்ட் நகர் புனித லூயிஸ் எப்பொழுது இறந்தார்?
15. புனித தனிஸ்லாஸை திருப்பலியின்போது கொன்ற அரசன் யார்?

### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 200/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

தீபகம்
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண்: 9385201453

பெயர்: ................................
முகவரி: ................................
................................
................................
................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

தொழிலாளர் புனித யோசேப்பு
புனிதர்கள் பிலிப்பு, யாக்கோபு, திருத்தூதர்
பாஸ்கா காலம் 3ம் ஞாயிறு
புனித தோமினிக் சாவியோ
புனித தமியான்
பாஸ்கா காலம் 4ம் ஞாயிறு மற்றும் இறையழைத்தல் ஞாயிறு
புனித மரிய மசரெல்லோ
புனித மத்தியா திருத்தூதர் விழா
அருளாளர் அலோசியஸ் ஓரியோனே
பாஸ்கா காலத்தின் 5ம் ஞாயிறு
கிறிஸ்தவர்களின் சகாய அன்னை விழா
பாஸ்கா காலத்தின் 6ம் ஞாயிறு
புனித ஜோசப் கொவால்ஸ்கி
புனித கன்னி மரியா எலிசபெத்தைச் சந்தித்தல் விழா

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

புனித மரிய தோமினிக்கா மசரெல்லோவின் வாழ்க்கை வரலாறு
கிறிஸ்தவர்களின் சகாய அன்னை நமக்குத் தரும் செய்தி
விடுமுறை விவிலியப் பள்ளி - ஒரு கண்ணோட்டம்
திருஅவையின் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இம்மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஏப்ரல் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## ஏப்ரல் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | செ | | எசே. 47: 1-9, 12 | யோவா. 5: 1-3, 5-16 |
| 2 | பு | பவோலா நகர் புனித பிரான்சிஸ் | எசா. 49: 8-15 | யோவா. 5: 17-30 |
| 3 | வி | | விப. 32: 7-14 | யோவா. 5: 31-47 |
| 4 | வெ | புனித இசிதோர் | சா.ஞா. 2:1, 12-22 | யோவா.7:1-2.10.25-30 |
| 5 | ச | புனித வின்சென்ட் பெரர் | எரே. 11:18-20 | யோவா. 7: 40-53 |
| 6 | **ஞா** | **தவக்காலம் 5ம் ஞாயிறு** | I. எசா. 43: 16-21<br>II. பிலி. 3: 8-14 | யோவா. 8: 1-11 |
| 7 | தி | லசால் நகர் புனித ஜான் பாப்டிஸ்ட் | தானி (இ) 2: 41-62 | யோவா. 8: 12-20 |
| 8 | செ | | எண். 21: 4-9 | யோவா. 8: 21-30 |
| 9 | பு | | தானி. 3:14-20, 24-25,28 | யோவா. 8: 31-42 |
| 10 | வி | | தொ.நூ. 17: 3-9 | யோவா. 8: 51-59 |
| 11 | வெ | புனித ஸ்தனிஸ்லாஸ் | எரே. 20: 10-13 | யோவா. 10: 313-42 |
| 12 | ச | | எசே. 37: 21-28 | யோவா. 11: 45-57 |
| 13 | **ஞா** | **ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு** | I. எசா. 50: 4-7<br>II. பிலி. 2: 6-11 | லூக். 22: 14-23: 56 |
| 14 | தி | | எசா. 42: 1-7 | யோவா. 12: 1-11 |
| 15 | செ | | எசா. 49: 1-6 | யோவா.13:21-33, 36-38 |
| 16 | பு | | எசா. 50: 4-9 | மத். 26: 14-25 |
| 17 | வி | **ஆண்டவரின் இரவு உணவு** | I. விப. 12: 1-8, 11-14<br>II. 1கொரி. 11: 23-26 | யோவா. 13: 1-15 |
| 18 | வெ | **ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி** | I. எசா. 52: 13-53:12<br>II. எபி. 4:14-16,5:7-9 | யோவா. 18: 1-19: 42 |
| 19 | ச | **புனித இரவில் பாஸ்கா திருவிழிப்பு** | எரே. 11: 18-20 | யோவா. 7: 40-53 |
| 20 | **ஞா** | **ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு** | I. தி.ப. 10: 34, 37-43<br>II. கொலோ. 3: 1-4 | யோவா. 20: 1-9 |
| 21 | தி | | திப. 2: 14, 22-23 | மத். 28: 8-15 |
| 22 | செ | | திப. 2: 36-41 | யோவா. 20: 11-18 |
| 23 | பு | | திப. 3: 1-10 | லூக். 24: 13-25 |
| 24 | வி | | திப. 3: 11-26 | லூக். 24: 35-48 |
| 25 | வெ | | திப. 4: 1-12 | யோவா. 21: 1-14 |
| 26 | ச | | திப. 4: 13-21 | மாற்கு 16: 9-15 |
| 27 | **ஞா** | **பாஸ்கா காலம் 2ம் ஞாயிறு, இறை இரக்கத்தின் ஞாயிறு** | I. திப. 5: 12-16<br>II. 1யோவா.1:9-11,12-13,17-19 | யோவா. 20: 19-31 |
| 28 | தி | மான்போர்ட் நகர்ப் புனித லூயிஸ் மரிய கிரிஞ்ஞோன் | திப. 4: 23-31 | யோவா. 3: 1-8 |
| 29 | செ | சியென்னா நகர்ப் புனித கத்ரீன் | திப. 4: 32-37 | யோவா. 3: 7-15 |
| 30 | பு | புனித ஐந்தாம் பயஸ் | திப. 5: 17-26 | யோவா. 3: 16-21 |

## தீபகம் – தொன் போஸ்கோ
நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்

வழங்கும்




# இல்லங்களில் திருவிவிலியக் கல்வி

## பருவம்-1

### திருத்தூதர் பணிகள் நூல்

- தபால் மூலம் பதினைந்து விரிவான பாடங்கள்
- உங்கள் புரிதலை உறுதிப்படுத்திக் கொள்ள கேள்வித் தொகுப்புகள்
- பதில் எழுதி அனுப்புவோருக்கு அழகிய சான்றிதழ்
- சான்றிதழ் கல்விக்கான கட்டணம் ரூ.500/-
- கட்டணம் அனுப்ப வேண்டிய வங்கி கணக்கு விபரம்

**013805300000 7612@SIBL0000138**
**SISS A/C DEEPAGAM**
**THE CITADEL, 45, Landons Road**
**Kilpauk, Chennai - 600010**

கட்டணம் செலுத்திய விபரம், பெயர், முகவரி, அலைபேசி எண்களை தெரிவிக்க வேண்டிய அலைபேசி எண் : 9385201453

www.upiqrcode.com


மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள

## தீபகம் +91 9385201453

தொடர்ந்து கற்கவிருக்கும் திருவிவிலிய நூல்கள் :
(தூய மத்தேயு, தூய யோவான் எழுதிய நற்செய்திகள், பவுலடியாரின் திருமடல்கள், திருவெளிப்பாடு)

## திருவிவிலியம்

*ஆழ்ந்து அறிவோம்! முனைந்து வாழ்வாக்குவோம்!! தெளிந்து அறிவிப்போம்!!!*



# தொன் போஸ்கோவின் 11வது வழித்தோன்றல்

*சலேசிய சபையின் புதிய உலகத் தலைவர்*

## பேரருட்திரு. ஃபேபியோ அடார்டு ச.ச.

அவர்களை தொன் போஸ்கோ - தீபகம் சார்பில்

**செப வாழ்த்துக்களோடு**

**வரவேற்று மகிழ்கிறோம்!**

*With Best Wishes*

**DEEPAGAM Staffs**

**DEEPACT** (Proclamation And Cultural Team)

**RECONNECT** (Couples for Faith)

**DBVOICES** (Youth Choir)

*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
கணினியேற்றம் : **கபிரியேல் மேரி** *அட்டைப்பட வடிவமைப்பு* : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
*தயாரிப்பில் மேற்பார்வை* : **சாண்டோ, ஈசாக்** *அச்சிட்டோர்* : **சிகா அச்சகம்,** *கீழ்ப்பாக்கம், சென்னை - 10*